விசேஷ
விளம்பரத்திற்கு!

# இந்துசாதனம்

விசேஷ
விளம்பரத்திற்கு!

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில்வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந் திகதி ஆரம்பமானது.

[புத்தகம்—ருஉ] யாழ்ப்பாணம்:— விக்கிரம ௵ ஐப்பசி ௴ ககவ (1940 நவம்பர் 4 திங்கட்கிழமை) [இலக்கம்—ருஎ]

## வித்தை

(சிவஸ்ரீ சி. சு. குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள், சென்னை)

உலகத்திலே உள்ள எல்லாச் சமயங்களையும் அங்கமாகக் கொண்டு தான் அங்கியாய் இராசாங்கத்தமர்ந்து விளங்குவது வைதிக சைவசமயமேயாம். ஏனைய சமயங்களில் உள்ள பொருள்களெல்லாம் சைவசமயத்தில் அங்கங்களாகக் காணப்பட்டு, ஏனைய சமயங்களால் உணரப்படாத பொருள்களுங் காணப்படும். மற்றைய சமயங்களில் உள்ள பொருள்கள் அனைத்தையும் ஏனைச் சமயம் ஒன்றேனும் கொள்வதில்லை. ஆகையினாலே மற்றச் சமயங்கட்குச் சைவசமயம் தோல்வி அடைவதில்லை. இப்படிப்பட்ட சிறப்பான சைவமதத்திற்குத் தகுந்த பிரசாரமின்மையால் அது காளுக்கு நாள் க்ஷீணமடைந்து வருகிறது. மேலும், சிவாசாரிய வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகிய நம்மவர்கள் அநேகர் தம் மதாபிப்பிராயத்துக்கு மாறுனவைகளைச் செய்கிறார்கள். அதற்குக் காரணம் வித்தையை நன்கு அப்பியசிக்காததே.

வித்தை என்றாலும் கல்வி என்றாலும் ஒக்கும். ஒருவன் நல்ல கல்வியறிவுள்ளவனாயிருப்பின் அவன் வருணாச்சிரம விதிப்படி நடப்பான் என்பதிற் சந்தேகமில்லை. கல்வி அறிவினால் திரஆராயும் சக்தி ஏற்பட்டு எல்லாச் சுத்தத்தையும் அடையலாம். வித்தையாவது வியத்தைக் கொடுக்கிறது. வியத்தினால் சற்பாத்திரனுந் தன்மையை அடைகிறான். சற்பாத்திரனுந் தன்மையில் தனத்தை அடைகிறான். தனத்தினால் தருமத்தையும் அதனாற் சுகத்தையும் அடைகிறான் என்று நீதிநூல் கூறுகின்றது. "கற்கை நன்றே கற்கை நன்றே—பிச்சை புகினும் கற்கை நன்றே" எனக் கூறப்பட்டதும் இதனை வலியுறுத்தும்.

ஒருவன் பொருள் இல்லாதவனாயிருப்பினும் கல்வியானாயிருந்தால் வேண்டும்போது அவ்வித்தையானது தனத்தைக் கொடுக்கும். இதனால் தனத்தைக் காட்டிலும் கல்வியே உயர்ந்தது என அறிஞர்கள் கூறுவர். செல்வத்தை அழித்துவிட முடியும். காமாக அழிக்கா விட்டாலும் துஷ்டர்கள் அபகரித்து விடுவார்கள். வித்தையை ஒருவராலும் அழிக்க முடியாது. கல்வியானது கீர்த்தியைக் கொடுக்கிறது. ஆசாரியனுக்கும் ஆசாரியனாக விளங்குகிறது. வித்தையானது பந்துஜனமாகவும், தேசாடனம் செய்யுங்கால் தெய்வமாகவும், இராஜாக்களின் சபையில் பொருட்கொடையும் பூசையும் செய்விக்கிறதாயும் இருக்கிறது. வித்தையை எவனொருவன் அப்பியசிக்காமல் இருக்கிறானோ அவன் மிருகத்திற்குச் சமானமாகிறான்.

அரசனுக்குந் தன் தேசத்திற்றானே சிறப்புண்டு. வித்தையுடையோனுக்கு அவன் சென்றவிடமெல்லாம் சிறப்புண்டு. ஆதலினாலே இராஜாவிலும் வித்தையுடையோனே சிறப்பு மிகவுடையவன். ஒரு வயிற்றுதித்தோருள்ளும் ஒருகுடிப் பிறந்தோருள்ளும் கற்றவனே சிறப்புடையன். அரசனும் கற்றவன் காட்டிய வழியிலேயே செல்லவேண்டியவன். செல்வப் பொருள் ஒருவனுக்குச் சம்பாதிக்கும் அந்த ஜன்மத்திற்றானே உதவுதலுடையது. கல்வி ஒருவனுக்கு எழுமையிலும் சென்று உதவுதலுடையது. இத்தனை மாட்சியெல்லாமுடைய வித்தையினை நல்லாசிரியரை அடைந்து, பொருள் கொடுத்தும் உற்றவிடத்து உதவியும் இன்சொற் சொல்லியும் சந்தேக விபரீதமறக் கற்றல் வேண்டும். சந்தேகம்—இதுவோ அதுவோ என ஒன்றிலே பிறவாது நிற்றல். விபரீதம் ஒன்றை மற்றொன்றாகத் துணிதல்.

யாம் ஓர் க்ஷேத்திரத்திற்குச் சென்றபோது அக்கோயிற் சிவாசாரியரைப் பார்த்து, "சுவாமி! இங்கு அம்பாளுக்குக் குடிவறன்தமா? வருஷறன்தமா?" என்று கேட்டேன். அதற்கு அவர் சிறிதாலோசித்து விட்டு "நீங்கள் சொல்வதே நமக்குப் புரியவில்லை" என்று கூறிச் சென்று விட்டார். அவர் நல்ல கல்வியில்லாததாலேயே அப்படிச் சொன்னார். ஆதலினாலே அறிய வேண்டுவனவற்றை அறிதற்குரிய சற்புத்திரனைப் பெற்ற பிதா அவனை வித்வசபையிலே அவர்களினும் மேம்பாடுற்று இருக்குமாறு கல்வியறிவுடையவனாக்குதல் வேண்டும். அதுவே பிதாவானவன் சற்புத்திரனுக்குச் செய்ய வேண்டிய உபகாரமாம்.

சிவாசாரிய மாயினோர்கள் தம் பிள்ளைகட்கு நிகண்டு, காவியம், வியாகரணம், தருக்கம் முதலிய சாமானிய வித்தைகளையும், விசேஷ வித்தையாகிய சைவாகமத்தையும் படிப்பித்தல் வேண்டும். மேலும், அவர்களுக்குத் தமிழிலும் நிகண்டு, இலக்கியம், இலக்கணம் முதலியவற்றையும், தமிழிலுள்ள சித்தாந்த நூல்களையும், தேவாரதிகளையும் பயிற்றுதல் வேண்டும். இங்ஙனம் சமய நூல்களை நன்குகச் சொல்லி வைத்து அவர்களைச் சிவபக்தியுடையவர்களாகச் செய்தல் வேண்டும்.

சைவ முதனூல்களைச் சற்குரு முகமாகக் கேட்டல், சிந்தித்தல் செய்யாதொழியின் சிவ்பெருமானை உணர்ந்து, மனம் வாக்குக் காயங்களினால் சத்திய பக்தியோடு அவரை வழிபட்டுச் சனனசாகரம் நீந்திக் கரைசேர்தல் முடியாது. அங்ஙனம் கற்றல், கேட்டல் செய்யினும் சிவபெருமானை வழிபடாதொழிந்தால் அந்த வித்தையாற் சிறிதேனும் பிரயோஜனமில்லை.

> கல்லார் நெஞ்சில்
> நில்லா னீசன்
> சொல்லா தாரோ
> டல்லோ நாமே.
>
> (திருஞானசம்பந்தர் தேவாரம்)

> கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
> நற்றா டொழாஅ ரெனின்.
>
> (திருக்குறள்)

ஆதலினாலே சிவநிந்தை, குருநிந்தை, சிவனடியார் நிந்தை, வேதாகமநிந்தை, கொலை, களவு, புலாலுண்ணல் முதலிய பாவங்களை ஒழித்து, சிவத்தியானம், சந்தியாவந்தனம், பஞ்சாக்ஷரஜபம், சிவபூசை, வேத பாராயணம், சிவாலயசேவை, தீக்ஷாகுரு வித்தியாகுரு முதலிய பெரியோர்களை வழிபடுதல் முதலாகிய புண்ணியங்களுடையராய் நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்தாலும், எத்தொழிலைச் செய்தாலும் என்றும் சிவபெருமானுடைய ஸ்ரீ பாதகமலங்களையே நினைதல் வேண்டும். அங்ஙனம் அநுக்ரகிப்பதாக விலாசதாண்டவ நிபுணனை பார்வதிசமேதனைப் பிரார்த்திக்கின்றேன்.

சைவசாஸ்திரபரிபாலனம்.

## சைவ விரதங்கள்

திரு. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை

சைவவிரதங்களுள் முக்கியமானவை சோமவாரவிரதமும் சிவராத்திரி விரதமுமாம். இக்காலத்தில் இவ்விரண்டு விரதங்களைக் கொண்டாடுவோர் மிகச்சிலரே யென்று கூறலாம். சனிவார விரதமும் ஏகாதசி விரதமும் வைணவ விரதங்களாம். ஆனால் இவற்றைக் கொண்டாடுவோர் பலராம். காரணம் வைணவர்களேயன்றிப் பல சைவர்களும் அவற்றைக் கொண்டாடுவது பிரத்தியக்ஷம். சைவவிரதங்களைச் சைவர்களே அனுட்டிப்பதில்லையென்றால் பிற மதத்தர்களைப் பற்றிப் பேசுவானேன்? இக்காலத்தில் பெரும்பாலாருக்குச் சைவத்தின் மேம்பாடும் அதன் திட்பநுட்பமும் தெரியா. சைவமும் வைணவமும் அபேதமென்ப. சைவநூல்களையும் சாத்திரங்களையும் கற்பாரும் போதிப்பாரும் இலர். இதனால் சாமானிய சனங்களிற் பலர் சிவபெருமானை வழிபடுதலால் இஷ்டசித்தி முதலியன கிடைக்கமாட்டா விஷ்ணுவை வழிபடுவதாலேயே அவை கிடைக்குமாலன என்னுந் தப்பான எண்ணமுடையவராயிருக்கின்றனர். இத் தப்பபிப்பிராயமே பலரைச் சனிக்கிழமை ஏகாதசி விரதங்களை அநுஷ்டிக்கச் செய்திருக்கின்றது. மகாசிவராத்திரி விரதத்தை அநுஷ்டிப்போரின் தொகையையும் வைகுண்ட ஏகாதசி விரதத்தைக் கொண்டாடுவோரின் தொகையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மை புலப்படும். சோமவாரம் பிரதோஷம் முதலிய விரதங்களை அநுஷ்டிக்காமல் விடுவதோடு நில்லாமல் திருப்பதி முதலிய வைணவ தலங்களுக்குச் சென்று பிரார்த்தனை செலுத்துவதோடன்றிச் சிவசின்னங்களைப் புறக்கணித்து நாமத்தைச் சாத்திக் கொள்ளுகின்றனர். நல்ல சைவ குடும்பத்தைச் சேர்ந்தவர்களுங்கூட புரட்டாசிச்சனிக்கிழமை, வைகுண்ட ஏகாதசி முதலிய நாட்களில் நாமத்தை அணிந்துகொள்ளுகிறார்களென்றால் அவர்களுக்குத் திருநீற்றினிடத்துள்ள பக்தியை யாம் என்னென்று எடுத்துக் கூறுவது! அவர்கள் தாங்கள் புதிதாக வழிபடும் திருமால் சிவபெருமானின் முதல் அடியவர் என்பதையும் அவர் இராமேசுரம், திருவீழிமிழலை, திருமாற்பேறு முதலிய தலங்களிற் சிவபெருமானைப் பூசித்துத் தமக்கு வேண்டிய வரங்களைப் பெற்றுள்ளார் என்னுஞ் சரிதங்களை அறிந்திருந்தால் சிவாபராதமான இக்காரியங்களைச் செய்யத் துணியவே மாட்டார்கள். திருமாலை வழிபடக்கூடாது என்று யான் கூற

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## சைக்கிள் திருடனுக்கு 6 மாதம்

31-10-40

ஒக்டோபர் மாதம் 26ந் திகதி புன்னாலைக்கட்டுவன் வடக்கில் வசிக்கும் கணபதிப்பிள்ளை-வேள்ளையன் பேரியகடை மீன்சந்தையிலிருந்து உரும்பராயில் வசிக்கும் வேலுப்பிள்ளை ஜோகரத்தினத்தின் 50ரூபாபெறுமதியான சயிக்கிளொன்றைக் களவாக எடுத்துச் சென்றபோது 2297 ம் இலக்கப் போலிஸ்காரன் M. J. சில்வா அவனைப் பிடித்தார். அவனைப்பிடித்து விசாரணைசெய்தபோது கணபதிப்பிள்ளை வேள்ளையன் களவாக அச்சயிக்கிளை எடுத்துச் சென்றதாக அறிந்தார். பின்னர் எதிரிமீது களவெடுத்ததாகக் குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் போலிஸ் நீதிபதி முன்னிலையில் ஒரு வழக்குத் தொடரப்பட்டது. வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டான். எதிரி இதற்கு முன்னரும் ஆறுமுறை குற்றப்பட்டதாக ஒப்புக்கொண்டான். நீதிபதி எதிரிக்கு ஆறுமாதக் கடூழியச் சிறைத்தண்டனையும் ஒருவருடப் போலிஸ் காவல் தண்டனையும் விதித்தார்.

க. கீ.

## ஆங்கில இராப் பாடசாலை

யாழ்ப்பாணம் ஆரியகுளத்தடிக் கருகாமையிலிருக்கும் பாஞ்சாலையிலுள்ள பாடசாலையிற் சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் முயற்சியினால் சென்ற செவ்வாய்க்கிழமை (13. 10. 40) தொடக்கம் இரவில் ஆங்கில வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. இவ்வகுப்புக்கள் இரவு 7 மணி தொடக்கம் 8½ மணி வரை (பாடசாலை மாணவரைத் தவிர) சேர்ந்து கற்றுக் கொள்ளலாம். (Basic English Course) என்னும் புதிய முறைக் கல்வி பயிற்றுவிக்கப்படுகின்றது.

இங்ஙனம்
சுவாமி பலபோவெறிசுமண
மனேச்சர்

"பாஞ்சாலை"
யாழ்ப்பாணம்
27. 10. 40.

## நவாலியில் தாலிக்கொடித் திருட்டு

### எதிரி 300ரூபாப் பிணையில் விடப்பட்டான்

28-10-40

நவாலியில் வசிக்கும் தம்பிமுத்து நடராசாவென்பவன் அவ்வூர் ஜோசுவாபெண் தங்கம்மாவின் ரூபா 120 பெறுமதியான தாலிக்கொடியைச் சென்ற 26 ந் திகதி அறுத்துக்கொண்டோடியதாக ஒருவழக்கு யாழ்ப்பாணம் போலிஸ் நீதிபதி திரு. E. V. R. சமரவிக்கிரம முன்னிலையிற் றொடரப்பட்டது.

ஜோசுவா பெண் தங்கம்மா கூறியவற்றின் சாராம்சமாவது:-

சென்ற சனிக்கிழமை (26-10-40) பிற்பகல் ஆறுமணியளவில் நான் ஆச்சிமுத்துவின் கடைக்குச் சீனிவாங்கச் சென்றிருந்தேன். சீனிவாங்கியதும் வீட்டைநோக்கிச் செல்லுகையில் பெஞ்சமின் செல்லையா வீட்டடியில் ஒழுங்கையிலிருந்து றோட்டிற்குத் திரும்புநேரத்தில் யாரோஎனது தாலிக்கொடியைப் பிடித்து இழுத்ததை உணர்ந்தேன். உடனே திரும்பிப் பார்த்தேன். அப்போது எதிரியைக் கண்டேன். எதிரிஓடினன். நான்நடராசா தாலிக்கொடியை அறுத்துக் கொண்டோடுகிறான் என்று சத்தமிட்டேன். எனனுடைய சத்தத்திற்கு பெஞ்சமின்-செல்லையாவும் பரமதமும் வேறுபேரும் அங்குவந்தனர். பரமதம் அங்குவந்தபோது எதிரி அவ்விடத்தைவிட்டு ஓடிவிட்டான். பெஞ்சமின் செல்லையா கண்தெரியாதகுருடன். எதிரிஓடிச்சென்றபக்கமாகத்தான் பரமதம் வந்தார். நான்பரமதத்திற்கு நடராசா தாலிக்கொடியை அறுத்துக்கொண்டோடு

## ஆகாயவசனி

சென்னை, திருச்சி

நேர அட்டவணை

3-ம் பக்கம் பார்க்க

கிறான் என்றுசொன்னேன். எனக்குக்காயங்கள் இருக்கின்றன. டாக்குத்தர் என்னைச் சோதனைசெய்தார். எதிரிக்குமெனக்கும் ஒருவகையான கோபமுமில்லைக்கொடுக்கல்வாங்கலுமில்லை. தாலிக்கொடியின் விலைரூபா 120 இதன்பின்னர்ச் சுந்தர்கைம் பெண் பரமதம் சாட்சியம் கூறியதும் எதிரிமீது குற்றஞ்சாட்டப்பட்டபோது எதிரி தான்குற்றவாளியல்லவெனக் கூறினன். நீதிபதி எதிரியை 300ரூபாப் பிணையிற் போகும்படி கட்டளையிட்டு வழக்கைமேல் விசாரணைக்காக வருகிற 14-10-40 ந் திகதிக்குத் தவணையிட்டார்.

ந. கி.

## கத்திக்குத்து வழக்கு

### எதிரிக்கு இரண்டுவருஷக் கடூழியமும் இரண்டுவருஷப் போலிஸ் காவலும்

31-10-40

ஒட்டுமடத்தடியில் வசிக்கும் குழந்தை-பெரியதம்பி என்பவனுக்குக் கோட்டடியில் வசிக்கும் நாராயணன்-கந்தையா வென்பவன் கத்தியாற் குத்திக் காயமுண்டாக்கியதாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்டவழக்குப் போலிஸ் நீதிபதி திரு. E. V. R. சமரவிக்கிரம முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணையின்பின் நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டார். எதிரி இதற்குமுன்னரும் ஆறுமுறை குற்றப்பட்டதாக ஒத்துக்கொண்டான். நீதிபதி எதிரிக்கு இரண்டு வருஷக் கடூழிய மறியறண்டனையும் இரண்டு வருஷப் போலிஸ்காவற்றண்டனையும் விதித்தார்.

ந. கி.

## மின்னலும் இடிமுழக்கமும்

### Thunder and Lightning

மட்டுவில்
(பிரமஸ்ரீ சி. சுப்பிரமணிய ஐயர்)
'இல்லைவாசம்'

மின்னலானது பூமிக்கும் முகிலுக்கும், அல்லது முகிலுக்கும் முகிலுக்குமிடையே தோற்றப்படும் பிரமாண்டமான மின்பொறிப் பாய்ச்சலாகும். இம்மின்பொறிப் பாய்ச்சல், ஒரே தன்மையற்ற மின் தாக்கங்கள், இடையேயுள்ள காற்றின் எதிர்ப்பை மேற்கொள்ளத்தக்க வன்மையுடையனவாகவிருக்கும் பொழுதே நிகழும்.

ஆகாயத்தில் மின்னலானது எவ்விதமுண்டாகிறதென்பதை மதித்தற் பொருட்டு வில்லியம் (Simpson) என்பவர் அநேககாலம் ஆராய்ச்சி செய்தார். ஆராய்ச்சி செய்த பொழுது, நீர்த்துளிகளானவை சிறு துளிகளாகப் பிரியும் பொழுது, நீர்த்துளிகள் நேர் மின்தன்மையை யடைகிறதையும் காற்றுனது எதிர்மின் தன்மையை யடைகிறதையும்; இவ்விதமான நிகழ்ச்சிகள் இடைவிடாது ஒன்றன் பின்னொன்றாக நிகழ்ந்து கொண்டிருப்பதால் ஏராளமான நேர்மின் சத்துக்களும், எதிர்மின் சத்துக்களும் ஆகாயத்திலே செறியப்படுகின்றன வென்பதையும், மின்னலானது எப்பொழுதும் நேர்மின்தன்மையுடைய இடத்திலிருந்தே உற்பத்தியாகி ஆற்றின் கிளைகளைப்போலப் பல கிளைகளாகப் பரவுகின்றன வென்பதையு மறிந்தார். இதுவுமன்றி மின்னலானது (a) பூமியிலிருந்து மேல்நோக்கி எதிர்மின் தன்மையுடைய முகிலுக்குச் செல்லுகின்ற தென்பதையும் (b) நேர்மின்தன்மையுடைய முகிலிலிருந்து எதிர்மின் தன்மையுடைய முகிலுக்குச் செல்லுகிற தென்பதையும் (c) நேர்மின்தன்மையுடைய முகிலிலிருந்து கீழ் நோக்கிச் செல்வதையும் அவதானித்தறிந்தார்.

நாம் அநேகமாகக் காண்கின்ற மின்னலானது நேர்மின் தன்மையுடைய முகிலிலிருந்து பூமியை நோக்கிச் செல்லும் மின்னலேயாகும். முகிலிலிருந்து முகிலுக்குச் செல்லும் மின்னலானது முகில்களினிடத்தே நிகழ்வதால் பூமியிலிருந்து பார்க்கும் பொழுது தெரியாமலேயிருக்கும். கவையுள்ள மின்னல்கள் (Forked Lightning) தோற்றுவதற்குக் காரணம் பாயும் மின் சத்து பவனத்தின் குறைந்த எதிர்ப்புள்ள பாதையை நாடுதலேயாம். கோடைகாலத்தில் காணப்படும் மின்னலானது, மிகத்தூரத்தில் நிகழும் கவையுள்ள மின்னல்கள், முகிலினிடத்தே பிரதிவிம்பிக்கப்பட்டுத் தோற்றுவதோன்றுகும். இவ்வித மின்னல் அதிக தூரத்தில் நிகழ்வதால் அதையடுத்து நிகழும் முழக்கம் பெரும்பாலும் நமக்குக் கேட்பதில்லை. மின் வீச்சுகள் (Flash of lightning) பொதுவாக மைல் கணக்கில் பாயும். இதுவரையறியப்பட்டவற்றுள் மிக நீண்ட மின் பாய்ச்சல் 10 மைலென அறிந்திருக்கிறார்கள்.

மின்னல் தோற்றுவதற்கு முன்னதாக ஆகாயத்தில் குவியல் மேகங்கள் காணப்படும். இவைகளின் அடிப்பாகமானது மட்டமாகவும், மேற்பாகமானது ஒழுங்கற்றுப் பூக்கோவா(Cauliflower) போன்றதாயும் வரையறுக்கப்பட்ட ஓரங்களையுடையதாகவுங் காணப்படும். உக்கிரமான இடி முழக்க காலங்களில் இவைகளின் அடிப்பாகமானது பூமியிலிருந்து 5000-6000 அடி உயரத்திற் காணப்படும். கோடைகாலத்தில் இம்முகில்களின் மேற்பாகம் 20000 அடி உயரத்தையும், மாரிகாலத்தில் 15000 அடி உயரத்தையு மடையும்.

மின்னல் தோற்றும் பொழுது அதன் பாதையிலுள்ள பவனமானது உஷ்ணமடையப்பெற்று விசாலித்து மேல் எழும்புகிறது. அப்பொழுது அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்குப் பக்கங்களிலுள்ள காற்றானது மிக வேகமாகச் செல்லுகிறது. அவ்விதம் செல்லும்பொழுது காற்றின் இரைச்சலானது முகில்களுக்கிடையே பிரதி தொனிக்கப்படுவதால் அச்சத்தமானது மிக உரமாகக் கேட்கிறது. இதையே நாம் இடிமுழக்கமெனக் கூறுகிறோம்.

வெளிச்சமானது (Light) சத்தத்திலும் (Sound) பார்க்க மிக வேகமாகச் செல்வதால், மின்னொளியானது முழக்கத்திலும் பார்க்க முன்னதாகத் தோற்றுகிறது. மின்னலோடு முழக்கமும் அடுத்துக் கேட்குமானால் புசலாவது கூடிய மழை விரைவிலுண்டாகுமென்பது தெரியவரும்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## தேசியக்கிளி!

திரு. நா. சிவபாதசுந்தரம் தொல்புரம்

மாலைநேரம் — அன்பர்களுக்கு ஆனந்தமூட்டும் அந்தி நேரம். கவிதாசோலையின் புனிதம் என்ன? ஆ! அன்பில, அதன் அதிக அன்பை அதிக வாஞ்சையைக் காட்டியது. ஒரு கிளி! அது சாதாரண கிளியல்ல—மோகனப் பசுங்கிளியல்ல, என் கண்களுக்குத் தேசியக் கிளியாகவே புலப்பட்டது. அதன் விழி விரக்காலல். இளந்திரு அறிவு, ஆற்றல், அஞ்சாமை, ஒற்றுமை, விடுதலை என்ற பஞ்சவர்ணங் கொண்ட பசுங்கிளி. இக்கிளியை வாவென்று அழைத்தேன். அது வந்து கையில் அமர்ந்தது. ஆ! அளவிலா மகிழ்ச்சி. மாலைக்கு வற்றமனமகிழ்ச்சி. பார்த்தேன். வருடினேன்! மார்போடு அணைத்தேன். கொஞ்சினேன். குலாவினேன். தெவிட்டா இன்பம். கிளியும் அகவியது.

ஆ! அன்ப! இன்றுதான் என்னைக் கண்டாயா? இன்றுதான் தெவிட்டா இன்பம் அடைந்தாயா? ஏன் இவ்வளவு காலமுங் காணவில்லை? இன்பத்தை இன்புறவில்லை? இன்றுதான் தெளிவுமிக்க மதியினனானாய். என்னை இன்னும் சிலர் 'வா' என்று அழைப்பதுமில்லை; அறிவாரில்லை. இப்படிப்பட்ட மனிதரும் இன்றுமிருக்கிறார்கள். இதை எண்ணித்தான் யோசித்து இப் புதுச்சோலையில் அமர்ந்திருந்தேன்.

இன்பமளித்த தசரி. இருக்கட்டும். இவ்வேளையில் இன்றுயிருக்கு இன்பமளித்த இன்பக்கிளியே! யார்? எங்குள்ளாய்? இவ்விடம் வந்த காரணம் யாது? உனது ஊரு, இரு, என்பவற்றை என்னுகையில் எனக்கு ஓர் ஆசங்கை எழுகிறது. கூறு பசும் பொன் கிளியே.

வீர! நான் திருநெல்வேலியில் எட்டையபுரத்தில் இருந்த சுப்பிரமணிய பாரதியாரின் வீட்டில் வசிக்கிறவள். அவரால் போதிக்கப்படுகிறவள். அவரிடம் உபதேசம் பெற்றவள். அந்த உபதேசத்தை நான் இருள்சூழ்ந்த, அடிமை, மடமை, வறுமை, வேற்றுமை ஆகிய இவைகளின் அழிநடனம் உள்ள இடங்களில் அறைந்து வருகிறேன். இப்பொழுது மாலை நேரமாதலால் இயற்கையில் ஈடுபட்டு இன்பமடைய வந்தேன்.

ஆகா! என்ன! என்ன! எட்டையபுரக்கிளியா? விடுதலைக் கோயிலின் பொன் மணிக் கூட்டில் பொலிவுடன் வளரும் புனிதக் கிளியா? ஆம்! நான் திருநெல்வேலியாகிய செந்தமிழ் வேலியிற் செழித்து வளர்ந்த கிளி! வீரக் கூடலினால் வளர்த்த வீரக்கிளி! கவிதாதேவிக்குப் பிறந்த கவிக்குயிலின் கண்மணியக்கிளி! ஆ! சகதேசமும் அவர் என்ன உபதேசித்தார்? அதை எனக்குக் கூறு.

அன்ப! என்னை அன்புடன் அழைத்த ஆண்டகையீர்! உங்கள் நெஞ்சில் உரமில்லை. நேர்மைத் திறமில்லை; ஆண்மையிழந்தது; நெஞ்சுலர்ந்தது; அதர்மத்திற்கு ஆளானது, வாயினின்று வெளிவரும் சொல் எல்லாம் வஞ்சனைச் சொல்— வாதம் புரியும் சொல்; சாதிமத வேறுபாட்டை வளர்வடையச் செய்யும் சொல்; வம்புச்சொல்.

> நெஞ்சிலுரமுமின்றி
> நேர்மைத்திறமுமின்றி
> வஞ்சனைசொல்வாரடி—கிளியே
> வாய்ச் சொல்லில் வீரரடி.

கூட்டங்கள் கூட்டுவார்கள். 'வந்தேமாதரம்' என்று கோஷிப்பார்கள். ஒன்றுபடுவோம், சாதிமதச் செருக்குச் சிதைப்போம், அகத்தில் அன்புக்கனல் கொளுத்துவோம், என்று கூவிக் கூவிப் பிதற்றலன்றி நாட்டத்திற் கொள்ளார்கள். போலி மனத்தர்—போலி மனிதர். இப்பொழுது—இக்கணத்தில் அகிலத்தை ஆளுவோம் என்பர். அடுத்தகாணில் அத்தனையும் அயர்த்துவிடுவார்கள்; இவர்களா தேசபக்தர்?

> கூட்டத்திற் கூடிநின்று
> கூவிப்பிதற்றலன்றி
> நாட்டத்திற்கொள்ளாரடி—கிளியே
> நாளில்மறப்பாரடி.

ஆ! மாதர் விடுதலை விழிப்படைய வேண்டும்? அவர்களுக்கு நல்ல கல்வி தரவேண்டும். விவாகத் தெரிந்து விவாகஞ் செய்யவேண்டும். பிதுரார்ஜிதத்திற் பெண்களுக்குச் சமபங்கு வேண்டும். விதவைகள் விவாகஞ் செய்யத் தடைசெய்யக்கூடாது. விவாகம் வெறுத்து வீரகினையில் ஆக்கந்தேடும் அரிவைகளைத் தடுக்கக்கூடாது.

இவைகள் பெண்களுக்கு இல்லையாம். கண்ணிரண்டு மிருந்தும் காணுந் திறமையில்லாத கிளியின் அல்லவா இருக்கிறார்கள். ஆ! பேசிப் பயன் என்ன? என்று அவாவுகிறார்.

> கண்களிரண்டிருந்தும்
> காணுந் திறமையற்ற
> பெண்களின் கூட்டமடி—கிளியே
> பேசிப்பயனென்னடி.

என் செல்வக்கிளியே! இக்காட்டு மாந்தர்கள் யந்திரசாலையென்பர். எங்கள் உடை, எங்கள் ஊர் உப்பு சீனி, சீலை, என்று சொல்லுவார்கள். அல்லாமல், தொழில் நிர்வாகச் சங்கம் ஏற்படுத்தி ஒவ்வொரு மக்களும் தத்தம் ஊர்களில் தாம் தாம் திருந்த முறையிற் பங்கிட்டுத் தொழிற்சாலைகளை ஆக்கவேண்டும் என்று, எண்ணம்—வாஞ்சை கொள்ளமாட்டார்கள். இதனால் தாமம் நீதியாக வளர்ந்து, வளமை பெருகி, வறுமை, அடிமை, மடமை யொழிந்து, வையகமெல்லாம் அமுதம்பெருகி வாழும் என்பதை அறியார்.

> உப்பென்றுஞ் சீனியென்றும்
> உள்நாட்டுச் சீலையென்றும்
> செப்பித்திரிவாரடி—கிளியே
> செய்வதறியாரடி.

இன்னுஞ் சில பேதையர்கள் அம்பாள் ஆலயங்களிலும், காளி கோயில்களிலும், தேவி கோயில்களிலும் போய், கன்றுண்டு, ஆடு கோழி என்பனவைகளை வெட்டி அன்பு பெருகும் நிலையங்களில் எல்லாம் உதிரம் பெருகும்படி செய்கிறார்கள். இவைகளையெல்லாம் எத்தனை போலிப் பக்தர்கள் தங்கள் ஆவி பெரிதென்றெண்ணி அஞ்சி அடங்கிக் கிடக்கிறார். இவர்கள் ஈனர்கள். இரக்கமில்லாதவர்

> இராக்கதர்கள் என்பதனை,
> தேவிகோயிலிற்சென்று
> தீமை பிறர்கள் செய்ய
> ஆவிபெரிதென் றெண்ணிக்—கிளியே
> அஞ்சிக்கிடந்தாரடி.

இன்றும் இவர்கள் அச்சமாகிய பேயின் அடிமைப்பட்டவர்கள். பேதைமையிற் பிரியப்பட்டவர்கள். அடிமைச் சிறுமதியில் அன்பு கொண்டவர்கள். இவைகளில் உச்சத்தில் உரிமை பூண்டவர்கள். ஊமைகள்—உண்மை கூறமுடியாத உலுத்தர்கள்.

> அச்சமும் பேடிமையும்
> அடிமைச் சிறுமதியும்
> உச்சத்திற் கொண்டாரடீ—கிளியே
> ஊமைச்சனங்களடி.

நாம் அடிமையில் ஆழ்ந்திருக்கிறோம், அவனியில் மதிப்பில்லை, என்ற மனமும், மனவலிமையும், உண்மைப்பற்றுமில்லாத மக்கள் ஓர்கண நேரமும் வாழலாமோ? வாழத் தகுதியா? மானஞ் சிறிதென்றும் வாழ்வே பெரிதென்றும் எண்ணும் இனக்குலத்தில்—அற்பர் உலகத்தில் வாழலாமா? இருக்க உரிமை—நிலைமை உண்டா?

> "மானம் சிறிதென் றெண்ணி
> வாழ்வு பெரிதென் றெண்ணும்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாம ரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விக்கிரம ஸ்ரீ ஐப்பசிமீ ௧௯உ திங்கட்கிழமை

## யுத்த நிலை

சென்ற ஒரு வாரத்திற் கிடையே அயிரோப்பிய யுத்தம் முன்னரைக் காட்டிலும் இன்னமும் பார்த்தற்கரிய மாறுதலை அடைந்து விட்டதெனலாம். இத்தலியர் கிரேக்கநாட்டிற்குப் படையெடுத்துச் செல்லலாயினர். இப்பொழுது இத்தலியருக்கும் கிரேக்கருக்குமிடையே யுத்தம் நடக்கலாயிற்று. இதலியும் ஜர்மனியும் பிரான்சும் இப்பொழுது அதிகம் ஒற்றுமைப்பட்டுக் கருமம் ஆற்றுகின்றன வென்பது தந்திச் சமாசாரங்கள் வாயிலாக அறியக்கிடக்கின்றது. இவர்களுடைய நோக்கமின்னது என்பதைத் திர்க்கமாகச்சொல்லுதல் முடியாது. சுவெஸ்கால்வாயையும் மத்தித்தரைக்கடலையும் எகிப்து நாட்டினையும் தங்களுடைய ஆதிக்கத்துட் கொண்டுவந்து விடுதற்கே இச் சர்வாதிகாரிகள் இப்பொழுது நோக்கங் கொண்டிருக்கிறார்களென ஊகிக்கக்கிடக்கின்றது. ஆனல் கிரேக்கர் திடமாக எதிர்த்து யுத்தஞ் செய்து இத்தலிய சைனியத்துடன் நிர்வகித்து நின்று அவர்களைப் புறங்காண்பரேல் சர்வாதிகாரிகள் கொண்ட அந்த நோக்கம் இலகுவிற் கைகூடுமோ என்பது சந்தேகம். இப்பொழுது கிரேக்கர் இத்தலியருடன் எதிர்த்து நின்று யுத்தஞ் செய்து இடையிடையே அவர்களைப் பின்னிட்வுஞ் செய்திருக்கிறார்களெனத் தந்திச்சமாசாரங்களைக்கொண்டு அறியலானேம். இந்த ஆரம்பசூரத்தவம் வழக்கம்போற் பின்னர்ச் சேர்த்துவிடாது இறுதிவரையில் நிற்குமேயானல் இவர்கள் வெற்றியடைவரெனக் காத்திருத்தற்கும் இடமுண்டு. கிரேக்கருக்குப் பிரித்தானியர் எல்லாவாற்றாலும் துணை செய்வதற்குச் சித்தமாயிருக்கின்றனர்; கிரேக்கருக்குப் பிருத்தானியர் துணைபுரியும்போது, இத்தலியர் சோர்வடைந்தால் ஜர்மனியர் அவர்கட்குத் துணைபுரியமாட்டார்களாவென்பது ஓர் ஆசங்கையாகும். அப்படி யாதும்நேர்ந்தால் துருக்கி யார்பக்கலிற் சேருமென்பது இன்னொரு ஆட்சேபம். இப்பொழுது துருக்கி யுத்தத்திற் பங்குபற்றுதலின்றிப் பொதுத் தன்மை வகித்து நின்றாலும், பொதுத் தன்மையை விடவேண்டிவரின் பிருத்தானியருக்கும் கிரேக்கருக்குமே துணைபுரியுமென அனுமானித்தற்குச் சில ஏதுக்களுண்டு; துருக்கி நாட்டின் பிரஜாதிபதி யாகிய இன்னியுனு என்பவர் தங்கள் சாதிய மகாசபையிற் பேசியபோது தங்கள் நேசபான்மையுடைய அயல்நாட்டினராகிய கிரேக்கருக்கு மாறுக இத்தலியர் அநியாயமாகப் படையெடுத்து வந்துள்ளனரென்றும், அவர்களுக்கும் பிருத்தானியருக்கும் தாம் துணைபுரிதல் ஆவசியகமென்றும் கருத்தமையப்பேசியுள்ளார். இவற்றையெல்லாம் நோக்குமிடத்தில் துருக்கியர் பிருத்தானியருடனும் கிரேக்கருடனும் நட்புப்பூண்டவர்களாய் ஜர்மனிய இத்தலியருக்கு மாறுய்க் கருமமாற்றுவரென்றே எண்ணக்கிடக்கின்றது.

இனி ஜர்மனியருக்கும் பிருத்தானியருக்குமிடையே நடைபெறும் ஆகாய யுத்தத்தைப் பற்றிச் சொல்லுமிடத்தில் முந்தி நடந்ததைக் காட்டிலும் ஜர்மனிய ஆகாயப்படை பிருத்தானியாவிற் குண்டுபெய்தலாகிய செயல் சிறிது சோர்வடைந்துவிட்டதெனலாம். ஆனல் பிருத்தானியர் லண்டன் முதலிய நகரங்கட்கு மேலாக வரும் பகைவர் விமானங்களைச் சுட்டு வீழ்த்துவதிலும் துரத்துவதிலும் ஜர்மனி மீதும் ஜர்மனியர் இப்பொழுது கைப்பற்றியுள்ள நாடுகள் மீதும் வெடிகுண்டுகளைப் பெய்து சேதம் விளைப்பதிலுஞ் சிறிதேனுஞ் சோர்வடையவில்லையெனலாம். ஜர்மனியர் பிருத்தானியருக்குரிய கப்பல்களைக் கடலுள் அமிழ்த்துவதில் முயற்சியாக நிற்கிறார்கள்; முந்திய வாரத்தில் மாத்திரம் ஜர்மனிய யூ. வள்ளங்கள் பிருத்தானியருக்குரிய 32 கப்பல்களை அமிழ்த்திவிட்டன. "எம்பிரஸ்" என்னப்படும் பிருத்தானிய பாரிய கப்பலொன்று பகைவராற் கடலுள் அமிழ்த்தப்பட்டுவிட்டதாம். இதற்குக் காரணமென்னையெனில் ஜர்மனிய சப்மறைன்கள் அத்திலாந்திக் சமுத்திரத்திற் சஞ்சரித்தலே யென்று சொல்லப்படுகிறது. பிரான்ஸியர் தோல்வியுற்ற பின் அத்திலாந்திச் சமுத்திரத்திலுள்ள பல கடற்படை ஸ்தானங்களும் துறைமுகங்களும் ஜர்மனியர் வசமாயின. ஆனலும் பிருத்தானிய கப்பலின் போக்கு வரவு இச் செயலால் அதிகந் தடைபடவில்லை; மேலும் பிருத்தானியர் தங்கள் கப்பல்களை மூழ்கக் கொடுத்துவிட்டுச் சும்மாவிருக்கவுமில்லை; எத்தனையோ கப்பல்கள் புதியனவாகச் செய்யப்படலாயின; பிரான்ஸிய கப்பல்கள் ஜர்மனியரின் ஆதிக்கத்துட்பட்டாலும் பிருத்தானிய கடற்படையோடு எந்தச் சாதியினரும் நிர்வகித்து நிற்றல் முடியாது. இதற்கிடையில் ஜிபிரேல்ராரிலுள்ள கப்பல்கள்மீதும் பகைவர்க்குரிய தோப்பிடோ தாக்கியனவென்றும் ஆனல் யாதும் ஊறுவிளைக்கவில்லை யென்றும் தெரிவிக்கப்படுகின்றது; இது இத்தலியர் செயலென்றே எண்ணப்படுகின்றது.

இப்பொழுது யுத்தம் பரந்து செல்லும் நிலைமையை யோசிக்குமிடத்தில், இப்போதைக்கு இந்தக் கொடிய யுத்தம் முடிவதும் உலக சமாதானமுண்டாவது மில்லையென்பதும் யூகிக்கக்கிடக்கின்றன. அமரிக்கர் இநிற்றலையிடிற்றன் இந்த யுத்தத்திற்கு ஒரு முடிவுவிரைவில் வருமெனக் காத்திருக்கலாம்; ஆனல் அமரிக்கா யுத்தத்திற் பிரவேசிப்பதும் பிரவேசியா தொழிவதும், நாளை நடக்கவிருக்கும் அமரிக்க பிரசாதிபதித்தெரிவிலேயே தங்கியிருக்கின்றது. கிரேக்கருக்குப் பிருத்தானியர் துணைபுரிய, பிருத்தானியருக்கு அமெரிக்கர் துணைபுரியின் இந்த யுத்தம் விரைவில் ஒரு முடிவிற்கு வருதலுங் கூடும்.

## சைவவித்தியா விருத்திச் சங்க விவகாரம்

இந்த விஷயமாக வருங் கடிதங்களை இன்னமும் ஏற்றுப் பிரசுரிப்பது எங்கள் சமயத்திற்குஞ் சமயக் கல்வி விருத்திக்கும் இடையூறுகுமென்பதே எமது தீர்க்கமான முடிபு. மேலும் இவ்விவகார சம்பந்தமான கடிதங்கள் இச் சைவவித்தியா விருத்திச் சங்கத் தாபனங்கட்கும் இவைபோன்ற ஏனைய சைவத் தாபனங்களுக்கும் பிரதிகூலமானவை; சமய ஸ்தாபனங்களை நடத்துவோர்க் கிடையில் வேற்றுமை வருவது இச் சைவமக்களுள் மாத்திரமென்று எண்ணுதல் தவறு; இலங்கையிலுள்ள ஏனைய சமய ஸ்தாபனங்களை நிர்வகித்து நடத்தும் விஷயத்தில் அங்ஙனம் நடத்தும் சபை சங்கங்கள் சிலவற்றிலே அபிப்பிராய பேதமும் பிணக்கும் நேர்ந்த சந்தர்ப்பங்களும் உண்டு; ஆனல் அவை ஆத்தரங்கமாக நிகழ்ந்து மறைந்து விடுவதுண்டு; ஒருகாலத்திலும் பகிரங்கமாக வந்ததில்லை; காரணம் அந்தந்தச் சமயத்தவர்களிடத்திருந்த சமயாபிமானமும் மேலான நோக்கமுமேயாகும்; மேலும் இந்த விஷயமான கடிதங்கள் மெல்ல மெல்ல ஆட்களைத் தாக்குதலும் கூறியதைக் கூறுதலுமாகக் காணப்படுகின்றனவேயொழிய உண்மையான நியாயங்களை எடுத்துத் தாக்க ரீதியாகக் கூறவதாகக் காணப்படவில்லை; சைவ வித்தியா விருத்திச் சங்கத்துள்ள வித்தியாசாலைகளின் அதிபராக விருந்த திரு. இராசரத்தினமவர்களின் மேல் மற்றைக்கட்சியார்சுமத்தும்குற்றம் அவர் உபாத்தியாயர்களிடத்தில் அவர்களுடைய விருப்பத்திற்கு மாறுகச் சங்கத்தாபனங்களின்பொருட்டுப் பணம்வாங்கினுரென்பதே. தாம் பணம் வாங்கியதென்பதை திரு. இராசரத்தினமவர்கள் எங்கேயினும் மறுத்துச் சொல்லியதாகக்காணவில்லை; ஆனல் பலாத்காரமாகத் தாம் எவரிடத்தேனும் வாங்கவில்லையென்பதை அவர் சாதிக்கின்றார்; இந்த விஷயமாக எழுதும் மறைநாம கட்சியார் அப்படித் திரு. இராசரத்தினம் எவரிடத்தேனும் பலாத்காரமாகப் பணம் வாங்கினரென்பதை ரூபப்படுத்திவிடுவதன்றி அவர்மீது வானாரூற்றஞ் சுமத்துவதனுல் வரும் பயனில்லையே; இன்னும் திரு. இராசரத்தினமவர்களைக் குறித்த சங்கத்தினின்றும் விலக்க வேண்டுமென நோக்கங் கொண்டால், அந்தச் சங்கத்தில் இவர்களும் இவர்களைச் சேர்ந்தவர்களும் பிரவேசித்துத் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றலாமென ஒருவர் எழுதியிருப்பதைப் பார்த்தோம். அப்படிச் செய்வதே முறையாகும். இவைகளைவிடுத்து இவர்கள் பரஸ்பரம் தூற்றுவதும் குற்றஞ் சுமத்துவதும் ஈற்றில் எங்கள் சைவசமயத்திற்கே இடையூறுகுமென்பதைக் கண்குணர்வார்களாக. சைவதாபனங்களுக்கு அநுகூலமான விஷயங்கள் எவையும் இப்பத்திரிகையில் வெளிவருமேயொழியப் பிரதிகூலமானவை வெளிவரா என்பதை இப்பத்திரிகை யபிமானிகள் எவரும் அறிந்துகொள்வார்களாக. இச்சைவ வித்தியாவிருத்திச்சங்க விவாதமான கடிதங்கள் இனி எவையும் வெளிப்படா வென்பதையும் அபிமானிகள் அவதானிப்பார்களாக.

# பண்டித நேரு கைதியானர்

### பாதுகாப்புச் சட்டப்படி சிறை செய்யப்பட்டாராம்

### கோரக்பூரில் விசாரணை

அலஹபாத் நவ 1

நேற்று சியோக்கிப் புகைரத நிலையத்திற் கைது செய்யப்பட்ட பண்டித ஜவஹர்லால் நேரு இன்று கோரக்பூர் போய்ச் சேர்ந்து விட்டதாகவும் நாளை தினம் அவரது விசாரணை நடைபெறுமென்றும் ஆனந்த பவனத்திற்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

### கைதியான விவரம்

பண்டித ஜவஹர்லால் நேரு வார்தாவில் காந்திஜியைக் கண்டு பேசிவிட்டு அலஹபாத்துக்குத் திரும்பும் வழியில் சியோக்கி என்னுமிடத்தில் இன்றிரவு 10-20 மணிக்குக் கைது செய்யப்பட்டார். சியோக்கிப் புகைரத நிலையம் அலஹபாத்திலிருந்து 15 மைலுக்கு அப்பாலிருக்கிறது.

அலஹபாத்திற்குப் புகைவண்டி வருவதற்காக நேருஜீ சியோக்கிப் புகைரத நிலையத்திற் காத்துக் கொண்டிருக்கையிற் பொலிஸ் உதவிச் சுப்பிறிண்டெண்ட் வந்து நேருஜீயைக் கைது செய்ய உத்தரவிடப்பட்டிருப்பதாகக் கூறி அவருக்காக ஒரு கார் தயாராக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். அப்பொழுது நேருஜீயை வழியனுப்புவதற்காகப் புகைரத நிலையத்திற் காங்கிரஸ் பிரமுகர்கள் பலர் கூடியிருந்தனர். நேருஜீ அவர்களோடு சம்பாஷித்துக் கொண்டிருக்கையிற்றன் கைது செய்யப்பட்டார். உடனே காங்கிரஸ் பிரமுகர்கள் அவருக்கு மாலை சூட்டினர். அதன்பின், பொலிஸ் உதவிச் சுப்பிறிண்டெண்ட் நேருஜீயைக் காரில் அழைத்துக் கொண்டு போயினர்.

### பாதுகாப்புச்சட்டப் பாய்ச்சல்?

சமீபத்தில் கோரக்பூரில் நிகழ்த்திய துவேஷமான பிரசங்கங்கள் சம்பந்தமாகவே பண்டித நேரு இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் 38 (1) "ஏ" பிரிவின் கீழ்க் கைது செய்யப்பட்டிருக்கிறார். அக்டோபர் 28-ந் திகதியன்றே, நேருஜீயைக் கைது செய்வதற்குக் கோரக்பூர் டிஸ்திறிக் நீதிபதி உத்தரவு பிறப்பித்து விட்டார்.

பண்டித நேரு அலஹபாத் பொலிஸ் சுப்பிறிண்டெண்டின் பங்களாவுக்குக் கொண்டு வரப்பட்டார். அங்கிருந்து அவர் கோரக்பூருக்குக் கொண்டு போகப்படுவார். கோரக்பூரில் அவர்மீது வழக்குத் தொடர்ந்து விசாரணை நடைபெறும்.

அலஹபாத்திலிருந்து புறப்படுவதற்கு முன்பாகப் பண்டித நேரு பொலிஸ் சுப்பிறிண்டெண்டுடன் விருந்துண்டார். அப்பொழுது ஜில்லா நீதிபதியும் பிரசன்னமாயிருந்தார்.

# மத்தித்தரைக் கடலில் மாபெரும்போர் நிகழலாம்!

## கிரேக்கநாடு யுத்தத்திலிறங்கியதால் ஏற்பட்டுள்ளவசதி

### பிருத்தானியபலம் பெருகிவருகிறது

லண்டன் நவ 2

இத்தாலி கிரீஸ்மீது யுத்தம் தொடுத்ததனாலு, மத்தியதரைக் கடலில் உள்ள பிரிட்டிஷ் கப்பற் படைக்குத் தனது நிர்வாகத்தைக் காட்ட நல்ல சந்தர்ப்பங்களை அளித்திருக்கிறது என்று இங்குள்ள விஷயம் தெரிந்த கடற்படை வட்டாரங்களிற் கூறப்படுகிறது. நீண்டகாலமாக இம்மாதிரியான சந்தர்ப்பங்கள் கிடைக்குமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த பிரிட்டிஷ் கடற்படைக்கு இப்போது இத்தாலியின் புதிய யுத்த வேகத்தால் நல்ல தருணம் வாய்த்திருக்கிறது.

எனவே, மத்தியதரைக் கடலில் மிகப் பெரிய கடற் சமர் ஏற்படலாமென்று எதிர் பார்ப்பது சகஜமாகும். மத்திய தரைக் கடலில் உள்ள பிரிட்டிஷ் கடற்படையின் பலம் சாமானியமானதல்ல. கிரீஸ் சமரில் இறங்கியிருப்பதால் மத்திய தரைக் கடலில் உள்ள கடற்படைக் கேந்திர ஸ்தானங்களுக்கு இப்போது பெருத்த முக்கியத்துவம் ஏற்பட்டிருக்கிறது. இத்தாலியக் கடற்படைத் தளங்களுக்கு அருகாமையிலேயே பிரிட்டனுக்கு முதல் தரமான தளங்கள் இருக்கின்றன. எனவே, மத்தியதரைக் கடலில் மிகப் பெரிய சமர் விரைவில் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்தாலியை எதிர்த்து இத்தாலியில் பெருவாரியான முறையில் போரை இயக்கப் பிரிட்டன் முயலும். இதற்குக் கிரீஸ்போரில் இறங்கியிருப்பது நல்ல சந்தர்ப்பங்களை அளிக்கத் தக்கதாயிருக்கிறது என்று கூறப்படுகிறது.

### கிரேக்கர் வெற்றி

ஏதன்ஸ் நவ 2

இத்தாலியத் துருப்புகளை மிகத் தீவிரமாக எதிர்த்துப் போராடிக் கொண்டே பெரிய யுத்த கோஷமுடன் கிரேக்க காலாட்சேனைகள் மிக முக்கியமான ஓர் மலையைக் கைப்பற்றியிருக்கின்றன. அம்மலையின் சிகரம் 495 அடி உயரமுடையது.

இந்த வெற்றி முதன் முதலாக அல்பேனியப் பிரதேசத்திற்குள் கிரேக்கத் துருப்புகள் இடம் பெறுவதற்கு வசதியளித்து விட்டது. இது மிக முக்கியமான சம்பவமாகக் கருதப்படுகிறது. அத்துடன் கிரேக்க இராணுவ வீரர்களின் தைரியம் பாராட்டத் தக்கதாகும். பிரான்டாப மலையிலிருந்து வரிசையாக நிறுத்தப்பட்ட பெரிய பீரங்கிப் படையின் மூலமாகக் கோரிட்ஸாவைத் தாக்க முடியும்.

### இத்தாலியின் அழிவுவேலை

கிரீஸ் தேசத்தின்மீது இத்தாலியின் விமானப் படையெடுப்பு நேற்றும், இன்றும் கடுமையாகக் காணப்பட்டது. ஏதன்ஸ் நகருக்கு அருகேயும், சலோனிகா, கோர்பூ, லாரிஸா முதலிய இடங்களிலும் இத்தாலிய விமானப்படைகள் குண்டு மாரி பொழிந்தன. 'தரைப்படை, விமானப்படை முதலியவைகளின் எதிர்ப்புகளின் கஷ்டங்களைச் சகித்துக்கொள்ள நாம் நம்மைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும்' என்று ஜெனரல் மீடாக்ஸஸ் சொல்லியிருக்கிறபடி நிலைமை மாறிவருகிறது. ஏதன்ஸ் நகரில் முதன் முதலாக விமானப்படையெடுப்பு எச்சரிக்கை சங்கு ஊதப்பட்டது. ஆனால், அங்கு கருக்குள் குண்டுகள் வீசப்படவில்லை.

சலோனிகாவில் ஏராளமான பொதுஜனங்கள் குண்டு மாரியாற் கொல்லப்பட்டார்கள்; பலருக்குக் காயம். இருபத்திரண்டு இடங்களில் தீப்பிடித்துக் கொண்டது. மூன்று பகுதிகளாய் அலைபோல வந்து யுத்த விமானங்கள் அங்கு படையெடுத்து வந்து குண்டுமாரி பொழிந்தன.

கோர்பூ எனும் இடத்தில் ஐந்து பேர் கொல்லப்பட்டார்கள். 26 பேர்கள் காயப்படுத்தப்பட்டனர். இராணுவ முக்கியத்துவமான பிரதேசங்களுக்கு வெகுதூரத்துக்கப்பால் நகரத்தின மத்திய பாகத்தில் உள்ள பொது இடங்களுக்குச் சேதமேற்படுத்தப்பட்டிருக்கிறது.

லசினிலாவில் உள்ள அதிமுக்கியமான செய்திப் போக்குவரத்து ஸ்தாபனப்பகுதியை நடுப்பகலில் ஒன்பது சாதாரண விமானங்கள் தாக்கி 32 குண்டுகளைப் பொழிந்தன. அதன் காரணமாக ஓர் இராணுவ வீரரும், வேறு நான்கு பேர்களும் கொல்லப்பட்டனர். மற்றும் இரண்டு இராணுவ வீரர்களுக்கும், ஓர் காவல் வீரருக்கும் காயம் ஏற்பட்டது.

### துருக்கியின் எச்சரிக்கை

இஸ்தான்புல், நவ 2—

அச்ச நாடுகளுடன் பல்கேரியா சேர்ந்து கொண்டால், துருக்கி சண்டைக்குக் கிளம்பிவிடுமென விஷயமறிந்த வட்டாரங்களில் அபிப்பிராயம் கூறப்படுகிறது. ஜெர்மன் துருப்புகள் பல்கேரியா வழியாக முன்னேறி வருவதற்கு முயற்சித்தால், அதைத் துருக்கி எதிர்க்கத் தயாராக இருப்பதாகவும் கூறப்படுகிறது. இத்தாலி—கிரீஸ் தகராறிலிருந்து விலகியிருக்க வேண்டுமென பல்கேரியாவுக்குத் துருக்கிப் பத்திரிகைகள் தொடர்ந்து எச்சரிக்கை செய்துவருகின்றன.

### துரத்தியடிக்கப்பட்டன

லண்டன் நவ 2—

பிரிட்டனுக்கெதிராக இன்றும் நேற்றும் நடந்த எதிரியின் விமானப்படையெடுப்பில் இத்தாலிய விமானங்களும் பங்கெடுத்துக்கொண்டன. ஆனால் அவைகள் விமான யுத்த எதிர்ப்புப் பீரங்கியின் குண்டுமாரியைச் சமாளித்து எதிர்த்து நிற்க விரும்பவில்லை. பிரிட்டிஷ் பாதுகாப்புப் படைகளின் மூலமாக அவைகள் சமுத்திரத்தின் பக்கமாக அடித்துத் துரத்தப்பட்டன.

### நாஸி விமானங்கள் நிர்மூலம்

ஒரு ஆள் அமர்ந்து ஓட்டத்தக்க ஜெர்மன் வெடிகுண்டுப் போர்விமானம் டோவருக்கு 5 மைல் உயரத்தில் பறந்தது. ஆனால், அதை பிரிட்டிஷ் விமானப் பீரங்கிகள் சுட்டு வீழ்த்தின. அந்த விமானம் எரிந்து புகைந்து வீழ்ந்தது. நேற்றுச் சத்துருவின் எட்டு விமானங்கள் பிரிட்டிஷாரால் சுட்டு வீழ்த்தி நாசமாக்கப்பட்டன. அதே சமயத்தில் பிரிட்டிஷ் விமானங்களில் ஆறுக்குச் சேதமும் ஏற்பட்டது. ஆனால் அவைகளில் இரு விமானிகள் பத்திரமாக உயிர் தப்பினார்கள் என்று ஆகாய மந்திரிசபை அறிக்கை ஒன்று கூறுகிறது.

### பீரங்கிகளின் முழக்கம்

டோவர் ஜலசந்தியில் போய்க் கொண்டிருந்த பிரிட்டிஷ் கப்பல்களை நோக்கிப் பிரெஞ்சுக் கடற்கரையிலுள்ள ஜெர்மன் பீரங்கிகள் நேற்றுப் பிற்பகல் குண்டுகளைப் பொழிந்தன. கென்ட் பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கான ஜனங்கள் அந்தப் பீரங்கிப் பிரயோகக் காட்சியைப் பார்த்தனர். பீரங்கிகள் வெடித்ததன் காரணமாகக் கால்வாய் கடற்கரை முழுவதும் அதிர்ந்தது. ஒரு மணி நேரமாகக் குண்டுகள் பொழியப்பட்டபோதிலும் பிரிட்டிஷ் கப்பல்கள் ஒன்றும் சேதமடையவில்லையென்று தோன்றுகிறது.

## கோவிற் களவு

சென்ற அக்டோபர் மாதம் 28ந் தேதி திங்கட்கிழமை இரவு மாவைகையம்பதியிலிருக்கும் அங்கணம்மைக் கடவையிலுள்ள மீனாட்சி அம்மை கோவிலிலும், கண்ணகி அம்மை கோவிலிலும், குளங்கரைப் பிள்ளையார் கோவிலிலும் திருடர் மேற்படி கோவிற்கதவுகளைப் பெயர்த்து உட்புகுந்து யந்திரத் தகடுகளையும் காறசிலைப்பு முதலியவைகளையும் திருடிவிட்டார்கள். களவுபோன பொருள்கள் ஏறக்குறைய ரூபா 300 பெறுமதியானவை இவைகளைப் பற்றிப் பொலிசாருக்கு அறிவித்திருக்கிறார்கள்.

சைவாபிமானிகளே!

இவ்விஷயத்தில் கரிசனை யெடுத்து உளவு பார்த்துத் திருடரை அறிவித்தால், அது சமயத்தின் வளர்ச்சிக்குச் செய்யும் ஓர் பெருந்தொண்டும் கடமையுமாகும்.

—நிருப

## தேங்காய்ப் பூவுக்கு 2-வது "ஓடர்"

### பழையவிலைக்கு வராதென பிரிட்டனுக்கு அறிவிப்பு

மேற்கொண்டும் 1500 தொன் தேங்காய்ப் பூவை உதவும்படி பிருத்தானிய உணவுப் பொருள் மந்திரி இலங்கைக்குக் கொடுத்துள்ள புதிய "ஓடரை"முந்தின"ஓடரை"ப் போலத் தொன் ஒன்றுக்கு 17 பவுண் விகிதத்திற்கு ஒப்புக்கொள்ள முடியாதெனத் தேங்காய்ப்பூ வித்பனை நிருவாக சபையார் பிரிட்டனுக்குத் தந்திமூலம் அறிவித்திருப்பதாகத் தெரிகிறது.

இலங்கையில் தேங்காயின் விலையும் தேங்காய்ப் பூவை வைத்து அனுப்புவதற்கு வேண்டிய பெட்டி அலுமினியத்தகடு,கம்பி,ஆணி,சுற்றுத் தகடு முதலிய சாமான்களின் விலைகளும் உயர்ந்திருப்பதினாலேயே மேற்கூறிய விலைக்குத் தேங்காய்ப்பூ உதவ முடியாதெனக் கூறப்படுவதாகத் தெரிகிறது.

## 99 தொழிலாளர் எச்சரிக்கையுடன் விடுதலை

பதுளை அக் 30

நாரங்கலைத் தோட்டத்தைச் சேர்ந்த 99 தொழிலாளிகள் அத் தோட்டத்தைவிட்டு வெளியேறுமல் தோட்டச் சுப்பிறிண்டெண்டான திரு. என். ஜே. பானர்மனுக்குத் தொந்தரவு உண்டு பண்ணியதாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகள் தோட்டத்தைவிட்டு வெளியேறிவிட்டமையால் பதுளைப் பொலிஸ் நீதிபதி திரு. ஆர். ஆர். செல்வத்துரை, அவர்களை எச்சரித்து விடுதலை செய்தார்.

குறித்த எதிரிகள் தமது சம்பளத்தையும் பற்றுச் சீட்டையும் பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டு ஆகஸ்டுமீ 12-ந் திகதிக்குப் பிறகும் தோட்டத்திலேயே தங்கியிருந்ததினால்தான் இவ்வழக்குத் தொடரப்பட்டது.

## நிகல் படமாளிகை

இப்படமாளிகையில் சென்ற வெள்ளிக்கிழமை தொடக்கம், காளி. என். ரத்தினம், டி. ஆர். இராமச்சந்திரன், ஜோக்கர் ராமுடு, எம். கே. கோபாலன், டி. வி. எ. பூரணி, எம். சந்திரா, வி. சுப்புலக்ஷுமி, வ. பத்மா ஆகியோர் நடித்த போலிப்பாஞ்சாலி, வாயாடி என்னும் இரண்டு விகடகைப்பை விளக்கும் படங்கள் காட்டப்பெற்று வருகின்றன. போலிப்பாஞ்சாலியில் ஒரு புருஷன் தன் மனைவி பாரதப் பிரசங்கம் கேட்கச் சென்று அங்கு பாஞ்சாலி ஐந்து புருஷரை வைத்திருந்ததைப் பிரசங்கியார் சொல்லக் கேட்டுத் தானும் ஐந்துபேரைப் புருஷராகவைத்திருக்க முயன்றதாகக் கனவு காண்பது காட்டப்படுகின்றது. வாயாடியில் புருஷரை அடக்கியாளும் பூவையும் அவள் மகளும் இறுதியில் தமது பிழையை உணர்ந்து புருஷருக்கு அடங்கி நடப்பது பார்த்தோர் குலுங்கக் குலுங்க நகைக்கக் கூடியதாகக் காட்டப்படுகின்றது.

பி. யு. சின்னப்பா, எம். வி. ராஜம்மா ஆகியோர் நடித்த யயாதி என்னும் படம் கூடிய விரைவில் இப்படமாளிகைக்கு வருமெனத் தெரிகிறது.

## பழஞ்சாதத்தால் நேர்ந்த பரிதாபம்

### உண்ட சிறுமி உடனே இறந்தாள்

மற்றும் மூவர் மயக்க நிலையிற் கிடக்கின்றனர்

யாழ்ப்பாணம் நவ 4—

கோப்பாயிலுள்ள ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் முதனாள் வைத்த பழஞ் சாதத்தை உண்டபோது எதிர்பாராத விதமாக ஆபத்துக்குள்ளானார்கள் என்று தெரிகிறது.

குறித்த குடும்பத்தைச் சேர்ந்த பாலனிக்கல் என்னும் மாதும் மகள் திரேசம்மாவும் மருமகன் ஞானம் மாவும் மயக்கமான நிலையில் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியிற் சிகிச்சைக்காகக் கொண்டுவரப்பட்டனர். அடுத்த வீட்டைச் சேர்ந்த மரியமதலை என்னும் சிறுமியும் அவ்வீட்டுக்குப் போனவிடத்தில் அவ்வீட்டார் தாம் உண்ட பழஞ்சாதத்தில் அவளுக்கும் கொடுத்ததாகவும் அந்தச் சிறுமி அதனை உண்ட உடனே மயக்கமடைய அவள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டு இரவு 8 மணியளவில் ஆஸ்பத்திரியில் இறந்தாள் என்றும் தெரிகிறது.

ஈ-நி

## பாதகமான காலநிலை

### விமானத்தபால் பாதிப்பு

கொழும்பு நவ 3

பாதகமான சீதோஷ்ண நிலைமையின் காரணமாக இந்தியாவுக்கும்-இலங்கைக்கும் இடையே நடந்து வரும் விமானத் தபாற் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டிருக்கிறது. சென்ற புதன்கிழமையிலிருந்து கொழும்புக்கு விமானத் தபால் ஒன்றும் வந்து சேரவில்லை. தபால்களை ஏற்றி வந்த ஒரு விமானம் திருச்சியிலிருந்து புறப்பட்டுக் கொழும்புக்கு வர முயன்றது. அது நேற்றுக்காலையிலேயே திருச்சியிலிருந்து புறப்பட்டுத் தலைமன்னாருக்குச் சமீபமாக வந்தது. பாதகமாகக் காற்றடித்ததினால், விமானம் கொழும்புக்குப் பிரயாணஞ் செய்யாமல் அங்கிருந்தே திரும்பிப் போகும்படி நேரிட்டது. காலநிலை சிறிது சாதகமாக மாறியதும் வழக்கம்போல விமானத் தபாற் போக்குவரத்துத் தொடங்கி விடும் என்று தெரிகிறது.

## வடபெரும்பாக சுவபாஷா, துவிபாஷா, பாடசாலை நாட்டுப்பாடல் ஆடல் காட்சி

—0—

டிவிஷன், உதவிவித்தியாதிகாரி ஸ்ரீமான். ஜே. சி. வீரக்கோன் அவர்களது பரிபாலனத்தில் யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் 1940-ஆம் நவம்பர்மீ 9-உ சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும். பிரவேசச் சீட்டு:-சேமம் செய்யப்பட்ட ஆசனம் ரூ 2, முதலாம் வகுப்பு(unreserved) ரூ 1 இரண்டாம் வகுப்பு (வாங்கு)சதம் 50. சேரும்பணம் முழுவதும்(யாழ்ப்பாண விமான)யுத்த நிதிக்கு அளிக்கப்படும். ஆசன ஒழுங்கு மாதிரியும் பிரவேசச் சீட்டும்,யாழ்ப்பாண வித்தியா கந்தோரில் பெறலாம்.(Teleph. No. 59)என்றும் பிரவேசச்சீட்டுக்களை முன்னுடியே வாங்கிக் கொள்ளுதல் நன்று என்றும் காட்சித் தினத்தில் சீட்டுகள் வாங்க முடியாதென்றும் பாடசாலைப் பிள்ளைகளுக்காக மேற்படி தினம் காலை 10 மணிக்கும் ஒரு காட்சி நடைபெறுமென்றும் பாடசாலைப் பிள்ளைகளுக்குப் பிரவேசக்கட்டணம் 10 சதமும் மற்றவர்களுக்கு 50 சதமும் என்றும் பாடசாலைப் பிள்ளைகளின் சீட்டு அவ்வப்பாடசாலைத் தலைமை ஆசிரியர் மூலமாகவே பெறலாமென்றும் தெரிவிக்கப் படுகிறது.

## பொன்னாலை இளைஞர் கலாவிருத்திச் சங்கம்

டி சங்கத்தின் கூட்டமொன்று சென்ற (30-10-40) புதன்கிழமை யன்று மாலை 6 மணியளவிற் பொன்னாலை வரதராஜ வித்தியாசாலை மண்டபத்தில் இந்துசாதன உதவிப்பத்திராசிரியர் திரு. க. இ. நடராஜன் அவர்கள் தலைமையிற் கூடியது. தலைவரும் பிரசாரகர்களும் காரியதரிசிகளால் மாலைசூட்டப்பெற்று வரவேற்கப்பட்டபின் தேவாரபாராயணத்தோடு கூட்டம் ஆரம்பமாயது.

தலைவர் தமது முன்னுரையில் சைவத்தின் தனிப்பெருஞ் சிறப்பையும் தமிழின் பெருமையையும் சுருக்கமாக எடுத்துக்கூறி அவை இரண்டையும் இரண்டு கண்களாகக் கருதிச் சைவ நூல்களையும் தமிழ்நூல்களையும் டி இளைஞர் கலாவிருத்திச் சங்கத்தார் கற்று முன்னேற்றமடைய வேண்டுமென்றும், அதற்குச் சாலவும் பொருத்தமுடையதாகப் பொன்னாலையில் ஒரு சைவப் பள்ளிக்கூடம் நிறுவப்பெற்றது பற்றிப் பொன்னாலை வாசிகள் பெருமிதமடையவேண்டுமென்றும், அக்கூட்டம் முதன் முறையாக ஒரு சைவப்பாடசாலை மண்டபத்தில் நடப்பது பெருமகிழ்ச்சி பயக்கத்தக்க தென்றும் குறிப்பிட்டார்.

அதன்பின்னர், மானிப்பாய் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியர் திரு. வி. வீரசிங்கம் B. A. அவர்கள் "மனிதனின் தெய்வீகம்" என்னும் பொருள்பற்றி ஓர் உணர்ச்சி ததும்பும் சொற்பொழிவு நிகழ்த்தினர். அதன்பின், திரு. சி. சிவலிங்கம் அவர்கள் "தீபாவளிப்பண்டிகை" என்னும் பொருள் பற்றிச் சுருக்கமாக ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அதன் பின், கொக்குவில் திரு. த. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் "பிறவிப் பெரும்பயன்" என்னும் பொருள்பற்றி விரிவாக எடுத்துப் பேசினர். சபையோர் குறிப்புரையும் தலைவர் குறிப்புரையும் முறையே நிகழ, திரு. இ. ச. வரதராசனால் தலைவருக்கும் பிரசாரகர்களுக்கும் ஏனையோர்களுக்கும் நன்றி கூறப்பட்டது. ஈற்றில், ஏறக்குறைய 10மணியளவில், கூட்டம் தேவாரபாராயணத்தோடு இனிது நிறைவேறியது.

—நிருப

# சைவ வித்தியா விருத்திச் சங்க விவகாரம்

'எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்' என்றபடி நம்முள் ஒன்றுபட்டால் வாழ்வுண்டு. அன்றேல் வாழ்வின்று. எந்த விடயத்தையும் யாம் நிறைவேற்ற நம்முள் ஒற்றுமை வேண்டும். மனிதன் சார்ந்ததன் வண்ணம், 'மானுஷியம்' என்ற மாத்திரை யானே சேர்க்கை என்றே பொருள்படும். நம்முள் தனியே ஒருவர் மாத்திரம் ஒரு பெரும் விஷயத்தை கிளைகாட்டி அன்றிச் சாதித்துப் பயனைபெற முடியாது. அதற்குப் பெருந் தியாகமும் புண்ணியமும் வேண்டும். 'Congress' 'காங்கிரஸ்,இவ்வளவு ஆதிக்கம் பெற்ற ஆங்கிலேயரோடு போட்டியிட்டு கலைமுறையில் சுதந்திர அரசியல் நிர்வாகம் பண்ணிய தெதனுல்? நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று கூடியமையாலும், 'காங்கிரஸ்' இயக்கத்தைத் தொடங்கிய மகாத்மா காந்தியடிகளை அன்றே மிகுமென்றும் அதன் உயிர் நாடியாயிருப்பதாற்றுமே யாகும். 'செல் விதைப்பவரொருவர் அதை அறுத்தனுபவிப்பவர் இன்னொருவரா! ஆக்குபவர் ஒருவர் அநுபவிப்பவ ரின்னொருவரானல், அப்படிப்பட்ட பெரிய நிர்வாகங்களை நிறுவி நிலைநாட்டி அதற்குரிய சொந்தக்காரர் விலகுவதாயின், அவர் நிலைமைதான் என்னாகும்!

நமது யாழ்ப்பாண நாட்டினுக்கூடப் பண்டைகாலில் நமது சைவமுந் தமிழும் அழகியற் கலைகளாம் சித்திரம் சங்கீதம் ஆதியனவும் மிக உன்னத நிலைமையிலிருந்தமையை அதன் காரணப் பெயராலேயே அறியக் கிடக்கின்றது. ஆயின் இடைக் காலத்தே அஃதழிந்தொழிந்தது. அந்நிய மதத்தினர் ஏற்பட்டும், அதற்குக் 'கவர்ண்மென்ருர்' உதவியும் பெரிதாயிருந்தமையான் அதன் மூலம் கல்வி ஸ்தாபனங்கள் பல ஏறபட்டன. அவர்தான் தமது சமயத்தை வளர்க்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தால் நமது வறிய இளஞ் சைவச் சிறுர்கள் பெண்களாதியோரை அவர்கட்கு உடை ஊண் சகலமுங் கொடுப்போம் எமது சமயமாக வேண்டும்; எமது பயிற்சி ஸ்தாபனங்களில் இலவசமாகப் படிப்பிப்போமென இவ்வாருகச்சொல்லித் தம் வசப்படுத்தித் தமது சமயத்தை வளர்ச்சியடையப் பண்ணினர்கள். இந்தக் கஷ்டமான காலத்தில் நம்நாடு செய்த அருந்தவப் பயனுச ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் அவதரித்தது நாம் தமது நுண்ணறிவு முதிர்ச்சியான் சைவசமயப் புராதன நூல்கள் பலவற்றைக் கற்றுத் தேறி அவற்றிற் கண்ட அரிய பெரிய விடயங்களைத் திரட்டி நமது சமயமீடேறும் பொருட்டுப் பல புத்தகங்களை வெளியிட்டும், தாமும் சமயப் பிரசங்கங்கள, பிறமத கண்டனங்கள் ஆதிய பல அரிய சேவையைச் செய்து வேறு சமயந் திரும்பியவர்களைப் பழையபடி திருப்பியும், தாமே பெருந்தொகைப் பணந் திரட்டிச் சைவசமயிகட்காக 'ஆறுமுகநாவலர் வித்தியாசாலை' என்ற ஓர் அரிய பயிற்சி ஸ்தாபனத்தையும் ஏற்படுத்தினர்.

அக்காலில் நமது சைவசமயத்தவர்கட்கென ஏற்பட்ட பள்ளிக்கூடமிதுவும் இன்னும் இரண்டொரு பள்ளிக்கூடங்களுமேயாகும். பின், ஆறுமுகநாவலரவர்கள் வழித் தோன்றலார்கள் பலர் ஒன்றுகூடி அப்பெரியார்தம் கட்டளைகளையும், போதனைகளையுந் தலைமேற்கொண்டு நமது சமயத்தோர்கள் முன்னேற நாமொன்றுகூடத் தம்முளொன்றுபட்டுப் பண்டைய மதுரை முச்சங்கங்களின் பெருமையையுமுற்று நோக்கித் தாமுமதைப் பின்பற்றிச் 'சைவபரிபாலனசபை', 'சைவ வித்தியா விருத்திச் சங்கம்' ஆதிய நல்ல நிர்வாகங்களை யேற்படுத்தி அதன் மூலம் சைவப் பள்ளிக்கூடங்கள் பலவற்றை ஸ்தாபித்தனர். அப்படியாகத் தற்போது நமது யாழ்ப்பாணத்தில் சுமார் 90, 99 சைவப் பள்ளிக்கூடங்கள் சைவ வித்தியா விருத்திச் சங்க ஆதரவின் கீழ் இருந்து வருகின்றன. இப்போது நமது சைவப்பிள்ளைகள நமது சைவப் பள்ளிக்கூடங்களிலேயே படிக்கக் கூடிய வசதியை இந்தச் 'சைவ வித்தியா விருத்தச் சங்கமே' ஏற்படுத்தியது; இவ்வரிய ஸ்தாபனங்களை இச்சங்க மேற்படுத்த முன் நமது பிள்ளைகள் சிவ! சிவ! என்று சொல்லியாவது நமது 'கடவுளை' வணக்கஞ் செய்தாவது பாடங்களை ஆரம்பிக்க முடியாதிருந்தனர். விபூதியை நெற்றியிட்டுக் கொண்டு போகமுடியாதிருந்தது. அக்கொடுமையில் இருந்த எங்களை யெமது 'சைவவித்தியாவிருத்திச்சங்கம்' 'எம்நாடு எமக்கேயுரியது' எமது சைவம் பெனமும் பெரியது! சிவத்திற்குஞ் செந்தமிழிற்கும் வேற்றுமை கிடையாது; 'சைவமுந் தமிழு மொன்றே' இன்னும் 'அகரமுதல வெழுத்தெல்லா மாதிபகவன் முதற்றே யுலகு' என்ற ஆன்றோர் வாக்குகளையெல்லாம் உண்மையாகி விட்டது. இப்படிப்பட்ட பெரிய ஸ்தாபனத்தை உண்டு பண்ணியவர்கள் சாதாரணமாக நம்போன்ருர்களல்லர். பெரும் புண்ணியமும், பாக்கியமும் வாய்ந்த தருமசீலர்கள். தற்சமயம் அவர்கள், தம்முட் சிறுசிறு அபிப்பிராயபேதங் காரணமாகத் தம்முள் ஏற்பட்ட ஊடல்களைப் பெரிதுங் கருதிப் பகைமை பாராட்டி யாழ்ப்பாண நாட்டிலன்றிப் பகிரங்கத்தில் அரசாங்கசபையிலுங் கூடப் பலரும், அந்நியர்களுங் கூடிப் பழிப்புப்பேச்சுப் பேசவிட்டுவிட்டது எம்மனோரால் கேட்கச் சகிக்க முடிகிறதில்லை. எம்சமயமிப்படியிருப்பின் பாழடைந்து விடும். எமது சமயத்திற் கென்றே யெனவிருக்குமிவ்வரிய சபை நிர்வாகிகள் எவ்வண்ணக் கலவரம் விளைத்தாலமைதசனுா எவ்வண்ணந்தான் முன்னேறுவது? மறுசமயத்தோர் அந்நியர்பலரும் நமது சைவவித்தியாவிருத்திச்சங்கநிர்வாகத்தார்களதுஊடலைவிட்டு அந்தரங்கத்தில் அவமானம் பண்ணுவது எம்மனோரால் சகிக்க முடிகிறதில்லை. அந்தோ! நமது இருகட்சித் தலைவர்கள் கவனியாது பிறரும் பிறரும் பகைமையையே சாதித்துப் போராடிக் கொண்டிருப்பது, பெருமக்களாய அவர்கட்கிது தகுதியாகுமா? புருடன் மனைவி இருவருக்குமுள்ள ஊடல் சிறிது நேரந்தான் மூன்றும் பேர் வழியறியாதே தமக்குளளேயே மாறித் திரும்ப அவ்வூடலே அவ்விருவருக்கும் பெரும இன்பத்தைப் பயக்கின்றதல்லவா? அஃதேபோன்று எப்பொழுது நமது சைவ வித்தியா விருத்திச் சங்க நிர்வாகக்காரர் இருபகுதியாரும் தம்முளொத்து ஒன்றுபட்டு அமைதியை நாடுவார்கள். இன்றே முற்றப் பெறுமாயின் அஃது நாமெல்லாருஞ் செய்த தவப் பயனேயாகும். சைவசமயத்திற்காக! நமது செந்தமிழிற்காக! சைவப் பெருமக்கள் ஆராவது இவ்வேளை அவர்கள் இருபாலாரையும் ஒன்றுசேர்ப்பார்களா? யாழ்ப்பாண வாசிகளாய யாமொவ்வொருவரும் அவர்களைப் பழைமைபோல் ஒன்றுபட்டுச் சைவத்தையும், தமிழையும், அதற்குரிய நிர்வாக ஸ்தாபனங்கள் சீர்குலையாது என்று மழியாப் புகழொடு பூர்ண சந்திரனைப் போன்றுவே நிலையோளிகாலப் பண்ணுவிக்க வேண்டுமாய்ப் பன்முறையும் பணிவுடன் வேண்டிகின்றேம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினிதோங்க! சைவ வித்தியா விருத்திச் சங்கம் வாழ்க. நம்முள் ஒற்றுமை நிலவுக.

இங்ஙனம்

வேலணைச் சைவசமயாபிமானி.

1-11-40

---

## விமானப் படையிற் சேர 1151 பேர்

### மனுச்செய்திருக்கின்றனர்

ரோயல் விமானப் படையிற் சேருவதற்கென இலங்கையர்களிடமிருந்து சென்ற புதன்கிழமை வரை மொத்தம் 1151 மனுக்கள் கிடைத் திருப்பதாகத் தெரிகிறது. இம்மனுதாரர்களில் அநேகருக்கு ஏற்கெனவே அறிவிக்கப் பட்டபடி போதிய கல்வி யோக்கிய தாம்சம் இல்லாததாற் பெரும்பாலான மனுதார்கள் ஏமாற்றம் அடைவார்களெனத் தெரிகிறது.

மனுக்கள் அனுப்புவதற்குப் புதன்கிழமை தான் கடைசித் தினமாகும்.

---

## தேவை

யாழ்ப்பாணம் உரும்பராய் சைவத் தமிழ்க் கலவன்பாடசாலைக்குத் தமிழ் ஆசிரியதராதரப் பத்திரம் அல்லது இரண்டாம் மூன்றும் பிரிவு தராதரப் பத்திரமுடைய ஓர் ஆசிரியை தேவை. 1940ம் ஆ நவம்பர் ௴ 16-ந் திகதிக்கு அல்லது அதற்குமுன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் கிளைப்பாடசாலைகளுக்கும் மனேஜராயுள்ளார்க்கு மனுச் செய்து கொள்க.

(Mis. 135 4-11& 7-11-40)

---

## நீர்வேலியிற் சத்திநாயனுர் குருபூசை

நிகழும் விக்கிரம வருடம் ஐப்பசி மாதம் 8ம் திகதி (24-10.40) வியாழக்கிழமை அறுபத்துமூன்று நாயன்மாரில் ஒருவராகிய சத்திநாயனுர் சிவபதமடைந்த தினம். இத்தினத்தில் நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் திருநாவுக்கரசு நாயனுர் குருபூசைமடத்தில் குருபூசை நடந்தது. குருபூசைக்குரிய ஒழுங்குகளை நீர்வேலி தெற்கு ஸ்ரீமதி டக்டர் வைத்திலிங்கம், அவர்கள் செய்தார்கள். மடம் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. இரவு 7 மணியளவில் இளைஞர்கள் பஜனை படித்தனர். அப்பொழுது ஆவரங்கால ஸ்ரீமான் க. சிவஞானம் அவர்கள் பாக வாத்தியம் வாசித்தார்கள். இவர் பாடிய அன்புக்கீர்த்தனைகளும், தேவாரம் முதலியனவும், அடியார்களைப் பரவசமடையச்செய்தன. பின்பு மடத்தின் உள்ளிருந்த நடராசப்பிரானது படத்துக்கு பிரமஸ்ரீ தியாகராசக் குருக்கள் அவர்களால் நைவேத்தியப் பூசை நடாத்தப்பட்டது. பின்பு விபூதி சந்தனம் முதலியன கொடுக்கப்பட்டது. பின்னர் ஸ்ரீமான் கு. சிற்சபேசன் அவர்கள் பக்கவாத்திய சகிதமாகச் சத்திநாயனுர் சரித்திரத்தைக் கதாப்பிரசங்க ரூபமாகப் பிரசங்கம் செய்தார்கள். அவர் கூறியதாவது:—

"சத்திநாயனுர் ஒரு சிவதொண்டர். இவர் சிவத்துரோகஞ் செய்பவர்களைத் தணடிக்கும் இயல்புடையவர். சிவனடியார்களை நிந்தை செய்பவர்களையும், சைவசமயத்தைப் பழிப்பவர்களையும், தேடிச்சென்று குறட்டினுலே நாக்கை இழுத்துப் பிடித்துக்கொண்டு கத்தியால் நாக்கை வெட்டி விடுவார். இவர் இத்திருத்தொண்டைச்செய்து இத்தினத்திற சிவபதமடைந்தார்; ஆனுல் இந்தக்காலத்திலே இப்படியாக ஓர் சத்தியுள்ள ஒருவர் இல்லையே என்று மனம் வருந்துகிறேம். இப்படியாக ஏன் இவலாது போய்விட்டது என்று கேட்டால் தற்காலத்துக் கல்விமுறையே காரணம் என்று கூறலாம். தற்காலத்துக் கல்விமுறையின் சக்தி எனவெனருல் ஆகாயவிமானமும், குண்டும் செய்யும் சக்தியேயாகும். இத்தக்கெட்ட சக்தியிருக்கும் போது நல்ல சத்தி எப்படிவரும். எவ்விதம் அறியலாம்? யாரைக் கேட்பது? யார் சொல்வது? நேற்று ஓர் இளைஞன் வீட்டுக்குப் போனேன். அங்கே நாளைக்குக் கோயிலில் ஓர் அபிஷேகம் செய்ய வேண்டும் என்று கதைத்தார்கள். இளைஞனுக்குக் கோபம் வந்து விட்டது. 'கடவுள் என்ன கடவுள்! கோயில்கள் எல்லாம் பிராமணரது பிழைப்புக்காகவல்லவா உண்டாக்கியது. எனக்கு நம்பிக்கை கொஞ்சமும் இல்லை. வீணில் காசைச் செலவழியாதீர்கள். நான் படித்த புத்தகங்களில் கடவுள் இல்லை என்றும் எல்லாம் இயற்கையின் மாறுதல்கள் என்றும் கூறுகின்றது. இவையெல்லாம் வெறும் பேய்த்தனம் என்று கூறினர். எப்படி இருக்கிறது சங்கதி! இந்தக் காலத்திலே பொதுவுடைமை முதலிய கொள்கைகளையே கல்வித் திட்டங் கற்பிக்கின்றது. இவைகளினுலே உண்மையான சக்தி வருவதில்லை. ஒருநாள் வெள்ளைக்காரனெருவன் சைவக் கோயிலுக்குச் சென்றுன். அப்பொழுது ஐயர் ஆதி மூலத்திற்குப் பூசை பண்ணிவிட்டு வெளியில் பலிபீடம்முதலியவற்றிற்குப் பூசை பண்ணினர். வெள்ளையன் பக்கத்தில் நின்ற ஒருவரைப் பார்த்து 'இது என்ன?' என்று ஆங்கிலத்திற் கேட்டான். அதற்கு அங்கு நின்றவர் 'இது பலி பீடம்' என்ருர். உடனே வெள்ளையன் தனது டயறியில் குறிப்பிட்டான். பின்னர் அந்த இடத்திற் சிறிது நேரம் நின்றுன். அங்கே வைத்த பிரசாதத்தைக் காகம் எடுத்தது. உடனே வெள்ளையன் தனது புத்தகத்தில் 'பலிபீடம் அல்லது காகத்துக்குச் சோறு வைக்கும் இடம்' என்று குறித்துக் கொண்டான். பார்த்தீர்களா சைவசமயத்தின் மகிமைகளை, 'பலிபீடம் இப்பொழுது காகத்துக்குச் சோறு வைக்கும் இடமாக' மாறி விட்டது. இப்படியே சைவசமயத்தின் உண்மைப் பொருள்கள் சிதைகின்றன. இவைகளை யெல்லாந் திருத்த வேறெரு சத்தி நாயனுர் வருவாரா? அப்படி வந்தாலும் உடனே பிரங்கிச் சூடுதான் நடக்கும். சபை யார்களே! கூடிய வரையிலும் சைவசமயத்தின் உண்மைகளை அறிய முனவருங்கள். நம் சமயத்தை அழியவிடாதீர்கள். சைவ இளைஞர்களுக்கு உண்மைக் கல்வியை ஊட்டும் காலம் வரட்டும்! வரட்டும்!! கடவுள் எங்கேயும் காப்பாற்றுவாராக. என்று கூறினர். ஈற்றில் ஸ்ரீமான் சி. வயித்திலிங்கம் அவர்கள் அடுத்த குருபூசையில் அனைவரும் ஒரு கூட்டம் கூடிக் குருபூசையைச் செவ்வனே நடத்துதற்குரிய ஒழுங்குகளைச் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். பின்பு அடியார்க் கமுதளிக்கப்பட்டது. இரவு 11 மணியளவில் குருபூசை இனிது நிறைவேறியது.

—கடித.

---

## சாரநாத்தில் நடக்கும் மகாநாடு

### இலங்கைப் பௌத்த கோஷ்டி பயணம்

கொழும்பு நவ 3

பௌத்தர்களின் மகாநாடு ஒன்று இம்மாதம் இந்தியாவில உள்ள புனிதஸ்தலமாகிய சாரநாத்தில் நடைபெறுமென்று தெரிய வருகிறது. இந்தியாவிற்கு இப்பொழுது போயிருக்கும் இலங்கை மந்திரிகளாகிய திருவாளர்கள் டி. எஸ். சேனநாயகா, எஸ். டப்ளியு. ஆர். டி. பண்டாரநாயகா ஆகிய இருவரும் குறித்த பௌத்த மகாநாட்டில் இலங்கைப் பௌத்தர்களின் பிரதிநிதிகளாகக் கலந்துகொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

இந்தியாவிலுள்ள பௌத்த க்ஷேத்திரங்களாகிய புத்தகயா, லும்பினி முதலிய பலஇடங்களுக்கு யாத்திரை போவதற்காக இக்கிழமை நேற்று முன்தினம் இரவு தலைமன்னர்ப் புகையிரத மூலம் 94 பிக்ஷுக்கள் ஓர் கோஷ்டியாக இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றுர்கள்.

---

## குருபூசை

நிகழும் விக்கிரம வருடம் ஐப்பசி மாதம் 15ந் திகதி வியாழக்கிழமை மெய்கண்டதேவர் சிவபதமடைந்த தினம். இத்தினத்தில் நீர்வேலி திருநாவுக்கரசுநாயனுர் குருபூசை மடத்திற் குருபூசை நடந்தது. முதலில் இளைஞர்கள் பஜனை படித்தனர். பின்பு உள்ளிருந்த நடராஜப் பெருமானது படத்துக்குப் பிரம்மஸ்ரீ அப்பாசாமிக் குருக்கள் அவர்களால் நைவேத்தியப் பூசை செய்யப்பட்டது. பின்னர், ச. நாகலிங்கம் அவர்களால் நாயனுர் சரித்திரத்தை எடுத்துக் கூறினர். ஈற்றில் அடியார்க் கமுதளிக்கப்பட்டு இரவு 10 மணியளவிற் குருபூசை இனிது நிறைவேறியது.

—கடித.

---

கொழும்பு கோட்டாஞ்சேனை குமாரக் கல்லூரித் தமிழ் மாணவர் வித்தியா சங்கம்

## ஐந்தாம் ஆண்டு விழா

ஷ கல்லூரி மண்டபத்தில் 26-10-40 சனிக்கிழமை மாலை 6-45 மணி தொடக்கம் மேற்படி சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு விழா வெகு விமரிசையாய் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு இப்பகுதி வித்தியாதரிசிதிரு A. M. K. குமாரசுவாமி அவர்கள் அக்கிராசனம் வகித்தனர். முதலாவதாக மேற்படி சங்கத் தலைவர் திரு. வை. முத்துக்குமாரசுவாமி அவர்கள் அறிக்கைப் பத்திரத்தை வாசித்தார். அதன் பின்னர் தமிழ் வித்தியாதரிசி திரு. இ. சரவணமுத்து அவர்கள் "தமிழின் இனிமை" என்னும் விஷயத்தைப் பற்றி, பல பாக்களுடன் அழகாக ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். பின்னர்ச் சுகாதாரப் பகுதி மந்திரியின் காரியதரிசி திரு. A. M. A. அசீஸ் C.C.S. அவர்கள் "தமிழ்க் கல்வி" என்னும் விஷயத்தைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். பின்னர் திரு. R. N. குணரத்தின அவர்கள் (ஆங்கிலத்தில்) வந்த பேச்சாளர்களுக்கும், சங்கத் தலைவருக்கும் தமது நன்றி உபகாரத்தை அறிவித்தார். அதன் பின்னர்க் கல்லூரி அதிபர் திரு. P D.S) ஜயசேகரா அவர்கள் (ஆங்கிலத்தில் சமுகமளித்த எல்லோருக்கும் தமது நன்றியையும் நல்வாக்கையும் கூறினர் திரு. A. M. K.குமாரசுவாமி அவர்கள் தமது முடிவுரையில் (ஆங்கிலத்திலும் தமிழிலும்) தமிழ், சிங்களம் என்னும் சுதேசிய மொழிகளை இலங்கையர் பயிலவேண்டிய ஆவசியகத்தை எடுத்து உணர்த்தினர்.

இரண்டாவது நிகழ்ச்சியாகிய சங்கீதவிழா மேல் மாகாணப் பிரதம வித்தியாதரிசியாகிய திரு. K. S. அருணந்தி அவர்களின் தலைமையின் கீழ் மாலை 7—45 மணி தொடக்கம் சிறப்பாக நடைபெற்றது. அச் சங்கீத விழாவில் திறமையான ஆடலுக்கு ஒரு பரிசும், திறமையான பாடலுக்கு ஒரு பரிசும், முறையே சிவராத்தினம், கேபிரியல்என்னும் மாணவர்களுக்கு திரு. K. S. அருணந்தி அவர்களால் அளிக்கப்பட்டது. பரிசுகள் திரு. S. இரத்தினநாதன திரு. R. N. குணரத்தின என்பவர்களால் கொடுக்கப்பட்டன.

சங்கீத விழாவை வெற்றிகரமாக நடத்துவதற்கு உதவிய திரு. R. L. விஜயரத்தினம அவர்களுக்குச் சங்கத் தலைவரின் நன்றி உரியதாகுக.

கடித.

---

## துருக்கித் தலைவர்

### கொள்கை விளக்கம்

லண்டன், நவ 2

நேற்று துருக்கியின் நாஷனல் அசெம்பிளிக் கூட்டத்தை அங்கிய நாட்டு பிரஸிடெண்டு (தலைவர்) திரு. இனுனு ஆரம்பித்துவைத்தார். அதுசமயம் அவர் சர்வதேச நிலைமை சம்பந்தமாகவும், துருக்கியின் கொள்கையைப்பற்றியும் விளக்கி ஒரு பிரசங்கஞ் செய்தார். துருக்கியின் கொள்கை மாருமலிருக்கிறதென்பதை எடுத்துக்காட்டினர். துருக்கி அனுஷ்டித்துவரும் சண்டையில் கலந்துகொள்ளாத கொள்கையானது மற்றநாடுகளுடன் சர்வசாதாரணமாக உள்ள உறவுமுறைகளை நீடித்துப் பாதுகாப்பதற்கு எத்தகைய தடையாகவுமிருக்கவில்லையென்றும், துருக்கியின் நேசநாடாகப் பிரிட்டன் விளங்குகிறதென்றும், குறிப்பிட்டுள்ளார். கிரீஸ் அநியாயமாகச் சண்டையில் இழுக்கப்பட்டிருக்கிறதென்பதை எடுத்துக்காட்டி அநுதாபம் தெரிவித்துள்ளார். ஸோவியத்-ருஷியாவுடன் துருக்கி கொண்டுள்ள நேசஉறவைப்பற்றியும் தெரிவித்துவிட்டுத் துருக்கியின் தேசிய ஐக்கியம் ஸ்திரமாக இருக்கிறதென்றும், நெருக்கடியின்போது தங்கள் தேச அழைப்பை ஏற்று எத்தகைய தியாகம் செய்யதற்கும் தயாராகஇருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

---

## சிசு மரண விகிதம்

### குறைக்க ஏற்பாடு

கொழும்பு, நவ 3

உலகத்திலேயே சிசுமரணம் அதிகமாக உள்ள நாடுகளில ஒன்ருக இருக்கும் இலங்கையில் அந்த மரணவிகிதத்தைக் குறைக்கவேண்டிய நடவடிக்கைகளைச் சுகாதார வைத்திய இலாகாதரர் எடுத்துக்கொண்டு வருகிருர்கள். சென்ற வருடத்திற் பிறந்த 6 குழந்தைக்கு ஒரு குழந்தைவீதம் மரணமாயிருக்கிறது. மொத்தம் 35,173 குழந்தைகள் சென்ற ஆண்டில் இறந்திருக்கின்றன. சென்ற 10 ஆண்டுகளின் சராசரி சிசுமரண விகிதம் 35,555 என்று கூறப்படுகிறது.

---

## டி காலுக்கு ஆதரவு

### ஆப்பிரிக்க நாடுகளின் ஆர்வம்

டாவுலர், நவ 2

சுதந்தரப் பிரெஞ்சுக்கோஷ்டியின் தலைவரான தளபதி டி காலுக்கு மேலும் மேலும் ஆதரவுகிடைத்துக்கொண்டிருக்கிறது. அவர் ஆப்பிரிக்காவுக்கு வந்ததிலிருந்து அவருக்கு ஆதரவு பெருகிக்கொண்டு வருகிறது. ஸிபான் குடியேற்றப் பிரதேசம் இப்போது தளபதி டிகால் கட்சியுடன் சேர்ந்திருக்கிறது. இத்துடன் லாம்பரனஸ், மிட்ஜிக், லாலரா, போய் முதலிய நகரங்களும் அவர் பக்கலில் சேர்ந்துள்ளன.

---

## இந்திய முஸ்லிம்களுக்கு

### ஜின்ன வேண்டுகோள்

பம்பாய், நவ 2

இன்று இங்கு நடந்த சதொழுகையின்போது, 20 ஆயிரம் முஸ்லிம் மக்கள் கூடியிருந்தனர். அகில இந்திய முஸ்லிம லீக்கின் தலைவரான ஜனுப்ஜின்ன அக்கூட்டத்தில் பேசியதன் சாரம் இது:-

முஸ்லிம் நாடுகளின் பாதுகாப்பிற்காவது, உரிமைக்காவது ஆபத்து வந்தால், இந்தியாவிலுள்ள ஒன்பது கோடி முஸ்லிம்களும் ஒன்றுசேர்ந்து, தங்கள் வசமுள்ள எல்லாச் சக்தியையும் ஒன்று திரட்டித் தங்களாற் கூடுமான உதவியை அந்த நாடுகளுக்குச் செய்யத் தயாராக இருக்கவேண்டும்.

முஸ்லிம் நாடுகளான எகிப்து, ஈரான், இராக், ஆப்கானிஸ்தானம் ஆகிய நாடுகளின் ஸ்தானிகர்களும் இந்தத் தொழுகையிற் கலந்து கொணடார்கள்.

---

## பல்வைத்திய விளம்பரம்

யப்பானியப் பல் வைத்தியரான எல் இமய் என்பவர் யாழ்ப்பாணம் பெரிய தெருவிலுள்ள திருச்செல்லம்பில்டிங்கில் 1940-ஆ நவம்பர் ௴ 7-ம தொடக்கம 16-ந் திகதிவரையில் பல்வைத்தியம் செய்யும் பொருட்டாகத் தங்கியிருப்பார்.

(Mis 140. 4-11-40)

---

# ஆகாய வசனி அறிக்கைகள்

## நவம்பர் 5 செவ்வாய்

### மதராஸ் 1

காலை: 7-30 ஸ்வாகதம், 7-35 தெலுங்கில் செய்திகள், 7-45 தமிழில் செய்திகள், 7-55 ஸ்ரீமதி கே. பி. நாராயணிபாய் பாட்டு, 8-25 சித்ரகானம் ஈஸ்வரய்யர், சண்முகம்பா கோஷ்டி, கோடி ரத்னம், சுந்தரம்மா, எம். எஸ். விஜயாள், 8-50 ஆங்கிலத்தில் செய்திகள், 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-30 ஆங்கிலத்தில் செய்திகள், 1-35 கல்லூரிகளுக்கு, 2-00 ஸ்ரீமதி கே. பி. நாராயணிபாய் பாட்டு, 2-20 மாதர்களுக்கு (தெலுங்கு), 2-45 தமிழில் செய்திகள், 2.50 தெலுங்கில் செய்திகள், 2-55 மாதர் வாத்தியகோஷ்டி, 3-00 ஒலிபரப்பு முடிவு.

மூன்றுவது ஒலிபரப்பு

மாலை: 4-00 ஆரம்பப் பாடசாலைகளுக்கு (தெலுங்கு), 4-30 ஐரோப்பிய சங்கீதம், 5-00 ஸ்ரீமதி ஆர். ஜயலக்ஷ்மி பாட்டு, 5-45 வாத்தியஇசை, 6-00 ஆங்கிலத்தில் செய்திகள், 6-05 பி. சுப்பிரமணிய ஐயர் புல்லாங்குழல், 6-30 தொண்டனும் காவலனும் நாடகம் ஏ. சுப்ரமண்யபாரதி. 6-45 வீணை, கோட்டுவாத்தியம் அ ஸ்ரீ ரா இசைவாணர், 7-00 நடைமுதல் நிகழ்ச்சி, 7-10 நேயர் விருப்பம், 7-20 தெலுங்கில் செய்திகள், 7-35 தமிழில் செய்திகள், 7-50 கே. பொன்னையாபிள்ளை பாட்டு, 9.00 குத்தம் குணம் கொடாது (ஆங்கிலப்பேச்சு), 9-10 இடைவேளை, 9.15 உள்நாட்டு வர்த்தமானமும் அறிவிப்புகளும் (ஆங்கிலம்), 9-20 ஆங்கிலத்தில் செய்திகள், 9.30 லண்டனிலிருந்துசெய்திகள், செய்திமுடிவில் மதராஸ் 2ல் உள்ளபடி, 10-30 ஒலிபரப்பு முடிவு.

### மதராஸ் 2

முதல்,இரண்டாவது ஒலிபரப்புகள் மதராஸ் 1-ல் உள்ளபடி.

மூன்றுவது ஒலிபரப்பு

4-00 மதராஸ் 1ல் உள்ளபடி, 6-05 கிராமநிகழ்ச்சி (தெலுங்கு), 6-30 மதராஸ் 1ல் உள்ளபடி, 6-45 ஒலிபரப்பு முடிவு.

நான்காவது ஒலிபரப்பு

7-00 மதராஸ் 1ல் உள்ளபடி, 9-30 ஸ்ரீமதி ஆர். ஜயலக்ஷ்மி பாட்டு, 10-00 தந்தி இசை நாராயணஐயங்கார் கோட்டு வாத்தியம், டி. சௌடையா வயலின் 10-30 ஒலிபரப்பு முடிவு.

### திருச்சி

முதல் ஒலிபரப்பு

காலை: 7-30 தோரம்பம், 7-45 தமிழில் செய்திகள், 7-55 டி. ஆர்.கிருஷ்ணமாச்சாரி வீணை, 8-50 ஆங்கிலத்தில் செய்திகள், 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-30 ஆங்கிலத்தில் செய்திகள், 1-35 சி. பி. வேதவியாசராவ் பாட்டு, 2.00 கல்வி ஒலிபரப்பு, 2-30 மூன்று குரல்கள், சீதாலக்ஷ்மி, எம். ஜே. சாரதா, ஜயா, 2-45 தமிழில் செய்திகள், 2 50 ஹிந்துஸ்தானி பாடம், 3-00 ஒலிபரப்பு முடிவு.

மூன்றுவது ஒலிபரப்பு

மாலை: 5-00 வாத்திய இசை. 5-15 டி. ஆர். கிருஷ்ணமாச்சாரி வீணை, 6-00 ஆங்கிலத்தில் செய்திகள், 6-05 டி. என். மாணிக்கம். ஸ்வர ராக சஞ்சாரபரணம், 6-15 சங்கீத அப்பியாசம், 6-30 கிராமாந்தரநிகழ்ச்சிகள் அதி, தற்புகழ்ச்சி—நாடகம், தம்மலே தம்மல்-பாட்டு நடைமுதல்பேச்சு வில்லவாசிகள், 7-00 இலக்கியவாசகம், மணிமேகலை, எம் நடேசமுதலியார், 7.15 நேயர்விருப்பம் கமலா பத்மநாபன் எச். ராமச்சந்திரராவ், செம்பை வைத்தியநாதபாகவதர், 7-30 அறிவிப்புகள், 7-35 தமிழில் செய்திகள், 7-50 மதராஸில்உள்ளபடி, 8-30 கால அறிவிப்பு, 9-00 கைதியின் கர்வம் நாடகம் வி. எஸ். செல்லப்பா, 9-15 இடைவேளை, 9-20 ஆங்கிலத்தில் செய்திகள், 9-30 லண்டனிலிருந்துசெய்திகள், 10-00 ஒலிபரப்பு முடிவு

## நவம்பர் 6 புதன்

### மதராஸ் 1

முதல் ஒலிபரப்பு

காலை: 7-30 ஸ்வாகதம், 7-35 தெலுங்கில் செய்திகள், 7.45 தமிழில் செய்திகள், 7-55 டி. சுப்பிரமணியஐயர்வீணை 8-25 படப்பாட்டு, 8-50, ஆங்கிலத்தில் செய்திகள், 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-30 ஆங்கிலத்தில் செய்திகள், 1.35 டி. சுப்ரமணிய ஐயர் வீணை, 2.00 பள்ளிக்கூடங்களுக்கு (ஆங்கிலம்), 2-30 பிடித்தவை, 2-45 தமிழில் செய்திகள் 2.50 தெலுங்கில்செய்திகள், 2-55 வாத்திய இசை, 3 00 ஒலிபரப்பு முடிவு.

மூன்றுவது ஒலிபரப்பு

மாலை: 4.00 ஆரம்பப் பாடசாலைகளுக்கு (தெலுங்கு), 4.30 ஐரோப்பிய சங்கீதம், 5.00 யாணபு வெங்கடபதி நாகஸ்வரம், 5-45 வாத்திய இசை, 6-00 ஆங்கிலத்தில் செய்திகள், 6-05 சித்தர் பாடல், 6.15 முற்றுப்பெருத ஓவியம் (தெலுங்கு நாடகம்), 6-30 யாணபு வெங்கடபதி நாகஸ்வரம், 7-00 உலகப்போக்கு, டி. எஸ். சொக்கலிங்கம், 7-15 வயலின் ஈரோடு விசுவநாத ஐயர், மஹாதேவ பாகவதர் 7-20 தெலுங்கில் பேச்சு 7-35 தமிழில் செய்திகள் 7.50 ஸ்ரீமதி சகுந்தலா ஸ்ரீமதி சுந்தரி பாட்டு, 8-30 எஸ். பி. எல். தனலக்ஷ்மி வாத்தியகோஷ்டியுடன் பாட்டு 9 00 ஆங்கிலத்தில் பேச்சு 9.10 இடைவேளை 9.15 உள்நாட்டுவர்த்தமானமும் அறிவிப்புகளும் (ஆங்கிலம்) 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 ஐரோப்பிய சங்கீதம் 10.30 ஒலிபரப்பு முடிவு.

### மதராஸ் 2

முதல்,இரண்டாவது ஒலிபரப்புகள் மதராஸ் 1ல் உள்ளபடி.

மூன்றுவது ஒலிபரப்பு

4-00 மதராஸ் 1ல் உள்ளபடி 6-45 ஒலிபரப்பு முடிவு.

நான்காவது ஒலிபரப்பு

7-00 மதராஸ் 1ல் உள்ளபடி 9-30 ராமதாஸ் சங்கீத உபன்னியாசம் எஸ். ஆர். ராதாபாய் 10.30 ஒலிபரப்பு முடிவு.

### திருச்சி

முதல் ஒலிபரப்பு

காலை 7.30 தோரம்பம் 7.45 தமிழில் செய்திகள் 7-55 குரல் ரதம் வடக்குஞ்சேரி மணிபாகவதர் குன்னக்குடி வெங்கடராமஐயர் கே. வி. கேசவபாகவதர் மன்னார்குடி ராஜகோபாலபிள்ளை மிருதங்கம் கொண்டான் வெங்கட்ராம ஐயர் 8-20 ஸ்ரீமதி அனந்தலக்ஷ்மிபாட்டு 8-50 ஆங்கிலத்தில் செய்திகள் 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.35 ஸ்ரீமதி அனந்த லக்ஷ்மி பாட்டு 2-00 கல்வி ஒலிபரப்பு 2.30 அம்பிகாபதி 2.45 தமிழில் செய்திகள் 2.50 ஹிந்துஸ்தானிபாடம் 3-00 ஒலிபரப்புமுடிவு.

மூன்றுவது ஒலிபரப்பு

மாலை: 5-00 வாத்திய இசை, 5-15 ஸ்ரீமதி டி. அபிராமிசுந்தரி வயலின் 6-00 ஆங்கிலத்தில் செய்திகள், 6-05 புதுக்கோடு வி. சீதாராமபாகவதர் பாட்டு, 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள், 7-00 மதராஸில் உள்ளபடி, 7-15 அ இ ரே வாத்யம் அல்லது நடைமுதல்நிகழ்ச்சி, 7-30 அறிவிப்புகள், 7-35 தமிழில் செய்திகள், 7-50 ஸ்ரீமதி டி. அபிராமிசுந்தரி வயலின், 8.30 புதுக்கோடு வி. சீதாராமபாகவதர் பாட்டு, 9.20 ஆங்கிலத்தில் செய்திகள், 9-30 லண்டனிலிருந்து செய்திகள், 10-00 ஒலிபரப்பு முடிவு.

## நவம்பர் 7 வியாழன்

### மதராஸ் 1

முதல் ஒலிபரப்பு

காலை: 7.30 ஸ்வாகதம், 7-35 தெலுங்கில் செய்திகள், 7-45 தமிழில் செய்திகள், 7-55 வி. என். சக்கரபாணி வயலின், 8-25 சித்ரகானம், வி. கிருஷ்ணவேணி, வி. நாகையா, எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி, அசுவத்தம்மா, 8-50 ஆங்கிலத்தில் செய்திகள், 9.00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-30 ஆங்கிலத்தில் செய்திகள், 1-35 கல்லூரிகளுக்கு, 2.00 வி. என். சக்கரபாணி வயலின், 2-30 மாதர்களுக்கு ஸ்ரீமதி டி. வி. அன்னபூரணி, நாகமணி மஹாதேவன், 2-45 தமிழில் செய்திகள், 2-50 தெலுங்கில்செய்திகள், 2-55 வாத்தியஇசை, 3-00 ஒலிபரப்புமுடிவு.

மூன்றுவது ஒலிபரப்பு

மாலை: 4-00 ஆரம்பப் பாடசாலைகளுக்கு, 4-30 ஐரோப்பியசங்கீதம், 5-00 ஆர். எஸ். லோகையா கிளாரினெட், 5.45 வாத்திய இசை 6.00 ஆங்கிலத்தில் செய்திகள், 6.05 ஸ்ரீமதி சுசீலா, ஸ்ரீமதி நாகமணி பாட்டு, 6-30 லாட்டா கோட்டா! நாடகம் கே. பி. கணபதி 6.45 ஆர். எஸ். லோகையா கிளாரினெட், 7-00 அயல்நாட்டு விவகாரங்கள் (தெலுங்கு) 7-15 தேசமங்கலம் சுப்பிரமணியஐயர் வீணை, 7-20 தெலுங்கில் செய்திகள், 7.35 தமிழில் செய்திகள், 7.50 திருச்சியில் உள்ளபடி, 8-55 ஆங்கில நாடகம், 9-15 உள்நாட்டு வர்த்தமானமும் அறிவிப்புகளும் (ஆங்கிலம்) 9-20 ஆங்கிலத்தில் செய்திகள், 9-30 லண்டனிலிருந்து செய்திகள் செய்தி முடிவில் மதராஸ் 2ல் உள்ளபடி, 10-30 ஒலிபரப்பு முடிவு.

### மதராஸ் 2

முதல் ,இரண்டாவது ஒலிபரப்புகள் மதராஸ் 1ல் உள்ளபடி.

மூன்றுவது ஒலிபரப்பு

மாலை: 4-00 மதராஸ் 1ல் உள்ளபடி, 6-05 கிராமநிகழ்ச்சி (தெலுங்கு), 6.30 மதராஸ் 1ல் உள்ளபடி, 6-45 ஒலிபரப்பு முடிவு.

நான்காவது ஒலிபரப்பு

7.00 மதராஸ் 1ல் உள்ளபடி, 9-30 ஸ்ரீமதி சுசீலா, ஸ்ரீமதி நாகமணிபாட்டு, 10 00 பிடித்தவை, 10.30 ஒலிபரப்பு முடிவு.

### திருச்சி

முதல் ஒலிபரப்பு

காலை: 7.30 தோரம்பம், 7.45 தமிழ்செய்திகள், 7-55 வி. டி. ஸ்ரீனிவாசமூர்த்தி புல்லாங்குழல், 8-50 ஆங்கிலத்தில்செய்திகள், 9.00 ஒலிபரப்புமுடிவு

இரண்டாவதுஒலிபரப்பு

1-30 ஆங்கிலத்தில் செய்திகள், 1-35 ஸ்ரீமதி வி. என். ராஜலக்ஷ்மி பாட்டு, 2-00 கல்வி ஒலிபரப்பு, 2-30 பஞ்சாப் கேசரி; 2-45 தமிழில் செய்திகள், 2.50 ஹிந்துஸ்தானி பாடம், 3-00 ஒலிபரப்பு முடிவு.

மூன்றுவது ஒலிபரப்பு

மாலை: 5.00 வாத்திய இசை, 5-15 வி. டி. ஸ்ரீனிவாசமூர்த்தி புல்லாங்குழல், 6.00 ஆங்கிலத்தில் செய்திகள், 6-05 கே. எல். ஸைகல், 6-15 சங்கீத அப்பியாசம், 6.30 கிராமாந்திர நிகழ்ச்சிகள், 7-00 சக்தியுகம், கைத்தொழில் நகரம் ஜி. பார்த்தசாரதி பேச்சு, 7.15 ஆசிரியரின்கோபம் நாடகம், பி. பொன்னுசாமி எழுதியது, 7-30 நிகழ்ச்சி அறிவிப்புகள், 7-35 தமிழில் செய்திகள், 7-50 ரேடியோக் கச்சேரி திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை பாட்டு திருவாலப்புத்தூர் கிருஷ்ணமூர்த்தி பிள்ளை பிடில் வாளாடி சுப்ரமணியபிள்ளை மிருதங்கம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10.00 ஒலிபரப்பு முடிவு.

